பக்கங்கள்: எட்டு

Registered as Newspaper

கணக்கியல்
செவ், வியாழன் வகுப்புகள்
89 Batch
பங்குடமை கலைத்தல்
ஒற்றைப் பதிவு
90 Batch
செம்மையாக்கல்
(தனி வியாபாரம்)
By
திரு. மரியதாஸ்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை:

# உதயன்

விலை
ரூ 2. 50

பொருளியல்
89—Batch
விலைச்சுட்டெண்
பகுதி I
சென்மதி நிலுவை
பகுதி II
90 — Batch
விலைக்கோட்பாடு
திங்கள், செவ்வாய்,
வியாழன் நாட்களில்
By
திரு. லோகசிங்கம்
எக்ஸ்பிறஸ்
இனஸ்ரிரியூட்
இருபாலை.

சுடர்: 4 விபவ ஹூ மார்கழி மீ 28 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 03 (12-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 43

# வடக்கு, கிழக்கு புனரமைப்புக்கு ரூ. 18 கோடி நிதி

## சர்வதேச நிறுவனங்கள் வழங்கும்

— அலுவலகச் செய்தியாளர் - ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், ஜனவரி 12

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்கு என 18 கோடி ரூபா நிதி உதவி கிடைத்திருக்கிறது. சர்வதேச நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் இத் தொகையை வழங்க முன்வந்திருக்கின்றன.**

**ஒக்ஸ்பாம், சிடா, நொரூட், யு. எஸ். எயிட், நோவி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களே இந்த உதவியை வழங்க முன்வந்திருக்கின்றன.**

**இந் நிதியைப் பயன்படுத்தி மூன்றுண்டுத் திட்டத்தில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்.**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜெகா செந்தில்நாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.**

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. பண்டாரகொட, புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரி திரு. லோகேஸ்வரன், மாகாண அமைச்சின் செயலாளர் திரு. பத்மநாதன் ஆகியோருடன் இணைந்து புனரமைப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்,

நிவாரண நிதி, மற்றும் நிவாரணப் பொருட்கள் விநியோகம், மீளக் குடியமர்தல் ஆகிய நடவடிக்கைகளை அந்த அந்தப் பகுதி செயலகங்களே மேற்கொள்ளும்.

புனர் வாழ்வு புனரமைப்புப் பணிகளை, இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பணிப்பாளர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள செயலகங்களுடன் இணைந்து மேற்கொள்வார்.

தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ள மூன்றுண்டு புனரமைப்பு திட்டம், அதன் செயற்பாடுகளைப் பொறுத்து ஐந்தாண்டுகளாக அதிகரிக்கப்படலாம் என்று திரு. ஜெகா செந்தில்நாதன் தெரிவித்தார். (உ-5)

### கல்லூரி நிர்வாகிகளிடம்

# ஹாட்லி, மெதடிஸ் இன்று கையளிப்பு

வல்வெட்டித்துறை, ஜன 12

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மெதடிஸ்த மகளிர் உயர்தரக் கல்லூரியும் இன்று உதியோகபூர்வமாக அதன் நிர்வாகிகளிடம் கையளிக்கப்படும்.

இக் கல்லூரிகளில் முகாமிட்டிருந்த படையினர் திருப்பி அழைக்கப்படுவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஹாட்லிக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களும் மகளிர் கல்லூரியின் ஒரு பிரிவினரும் முதல் கட்டமாக இன்று வகுப்புகளுக்குச் செல்வார்கள் என சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்கள் தெரிவித்தனர். (உ-160)

### இனப்பிரச்சினைக்கான தீர்வு:

# தனது யோசனைகளையே சு. க. கைவிட்டது!

கொழும்பு ஜன 12

ஸ்ரீ ல. சு. கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விஞ்ஞாபனத்தில் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து தெரிவிக்கப்பட்டிருந்த யோசனைகள் சிலவற்றை அக்கட்சி கைவிட்டுவிட்டது.

பாராளுமன்றத் தேர்தலுக்காக புதிய தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை அக்கட்சி தயாரித்து வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட பொது வேலைத் திட்டத்தையும் அக்கட்சி கைவிடுகிறது.

இத் தகவலை சுதந்திரக் கட்சிப் பிரமுகரும் முன்னுள் சபாநாயகருமான ஸ்டான்லி திலக [8 ஆம் பக்கம் பார்க்க]

# அவசரகாலநிலை நீக்கப்பட்டது

கொழும்பு ஜன 12

கடந்த ஐந்தரை ஆண்டு காலமாக நாட்டில் அமுல் செய்யப்பட்டு வந்த அவசரகால விதிகள் நேற்று (புதன் கிழமை) நள்ளிரவுடன் நீக்கப்பட்டன.

இது சம்பந்தமான அறிவித்தல் வெளியிடப்பட்டது குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்ட முடிவில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தகவல் வெளியிட்டார்.

அவசரகாலச்சட்ட விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டது முதல்,மாதா மாதம் அதனை நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு வந்தது.

கடைசியாக சடந்த மாதம் 17 ஆம் திகதி

(8-ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்தேவி ரயில் நேற்று வவுனியாவுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன 12

கொழும்பு - யாழ்ப்பாணம் யாழ்தேவி ரயில் சேவை நேற்று வவுனியாவுடன் நிறுத்தப்பட்டது.

இதனால் பெரும் எண்ணிக்கையான பயணிகள் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள பிரயாண வசதியின்றி வவுனியாவில் தங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை நேற்று யாழ்ப்பாணம் வரவிருந்த சரக்கு ரயிலும் வவுனியாவுடன் இடை நிறுத்தப்பட்டது

தடைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

இதனிடையே இன்று யாழ்தேவி யாழ்ப்பாணம் வரும் என்றும் நாளை காலை 9 மணிக்கு மீண்டும் கொழும்பு நோக்கி அது புறப்படும் என்றும் யாழ். ரயில் வேத் திணைக்களம் தெரிவித்தது. (ஒ-10)

### பலாலியில் பாதிப்புற்ரோருக்கு

# ரூபா 28 லட்சம் செலவில் வீமன்காமத்தில் 82 வீடுகள்

## நோர்வே செஞ்சிலுவை வழங்கும்

யாழ்ப்பாணம் ஜன 12

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதியில் 28 லட்சம் ரூபா செலவில் 82 வீடுகளைக் கட்டிக்கொடுக்கவுள்ளது.

ஒரு வீட்டை அமைப்பதற்கு 35 ஆயிரம் ரூபா செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

யாழ். செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

பலாலி இராணுவ முகாமை விஸ்தரிப்பதற்காக இலங்கை இராணு [8 ஆம் பக்கம் பார்க்க]

### வல்வெட்டித்துறை

# வேம்படிப் பகுதியில் நடந்த மோதல்

வல்வெட்டித்துறை ஜன 12

நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை)பிற்பகல் 2 மணிக்கு வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து அப்பகுதியில் உடனடியாக ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான படையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

மோதலின் போது படுகாயமடைந்த வல்வையைச் சேர்ந்த சபாரத்தினம் பஞ்சாட்சர தேவி (வயது 32) என்னும் பெண்மணி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (உ-160)

# வல்வை, உடுப்பிட்டி, பகுதிகளில் ஊரடங்கு

வல்வை, ஜன 12

நேற்று முன்தினம் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி போன்ற இடங்களில் தொடர்ச்சியான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

11 ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் ஒரே ஒரு அம்புலன்ஸ் வண்டி மட்டும் வல்வை இந்திராணி வைத்தியசாலையில் இருந்து பருத்தித்துறை மந்திகை சுகாதார வைத்தியசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டது.

அமைதிப்படையினர் வீடு வீடாகச் சென்று தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது ஆண்களும் பெண்களும்

(8-ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு, திருமலைக்கு மின் விநியோகம்

ஒட்டுசுட்டான், ஜன 12

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தடைப்பட்டிருந்த மின் விநியோகம் தற்பொழுது மீண்டும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை திருகோணமலை நகருக்கும் கடந்த 4 ஆம் திகதி முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-113-150)

### சுபநேரம்

13 -1 - 1989
வியாழக்கிழமை
மார்கழி 28

சுபநேரம்:
8.03 முதல் 9.33 வரை
ராகுகாலம்:
02.03 முதல் 3 33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### வடக்கு, கிழக்கில் மீண்டும்

# நகை அடகு பிடிக்கும் வேலை

## மக்கள் வங்கிக் கிளைகளில் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜனவரி 12

**வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் மீண்டும் நகை அடகு பிடிக்கும் வேலைகளை ஆரம்பிப்பது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.**

**அடுத்த சில மாதத்தில் இதனை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கான ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடத்தப்பட்டிருக்கின்றன.**

நகை அடகு பிடிக்கும் வேலைகள் மூலமாகவே மக்கள் வங்கிக்குக் கூடுதல் வருமானம் இடைத்து வருகிறது. இதனால் இத்திட்டத்தை வடக்கு, கிழக்கில் மீண்டும் செயற்படுத்துவது குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னைய காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து இதன் மூலம் இடைத்த வருமானம் குறிப்பிடத்தக்கதாக இருந்து வந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளையில் கொழும்பிலிருந்து மற்றொரு தொகை அடகு நகைகள் விரைவில் இங்கே கொண்டுவரப்பட இருக்கின்றன.

புங்குடுதீவு, கன்று திட்டி, சங்கானை, யாழ். பிரதானவீதி ஆகிய இடங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளே முதலில் வந்து சேர உள்ளன.

ஏனைய கிளைகளைச் சேர்ந்த நகைகள் அதனையடுத்து கொண்டுவரப்படும்.

எந்தெந்தக் கிளைகளில் நகைகள் அடகு வைக்கப்பட்டதோ அந்தந்தக் கிளைகளில் வைத்தே நகைகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-ஐ)

### மூச்சந்தி முனி



எலக்ஷனுக்கு எலக்ஷன் புதுககதை விடுகினமோ அம்மா கட்சிக்காரர்......?

# மூடிக்கிடந்த கடைகள்

யாழ்ப்பாணம், ஜன 12

யாழ். வெலிங்டன் சந்தியில் உள்ள கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை இந்தச் சந்தியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்தே கடைகள் மூடப்பட்டன. (ஒ-10)

# யாழ் ஆஸ்பத்திரியின் புதிய பணிப்பாளர்

டாக்டர் திரு. சி. கிருஷ்ணராஜா யாழ் போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக அடுத்தவாரமளவில் நியமிக்கப்படுவார் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் வடமராட்சியைச் சேர்ந்தவர். தற்போது யாழ் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றிவருகிறார்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் வடக்கு கிழக்கு மாகாணசபையின் சுகாதார அமைச்சுச் செயலாளர் பதவியைப் பொறுப்பேற்றிருப்பதை அடுத்து பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியிருக்கிறது. [உ-10]

# பென்ஷன் காசோலைகள் இன்று வங்கிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 12

ஜனவரி மாதத்திற்கான பென்ஷன் காசோலைகள் இன்று வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

கிராமிய வங்கிகளில் நாளை தொடக்கமும் ஏனைய வங்கிகளில் அடுத்த வார முற்பகுதியிலும் பென்ஷனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-5)

# காங்கேசனில் நிவாரணம்

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் இன்று மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பன்னாலையைச் சேர்ந்த 181 குடும்பங்களும், நகுலேஸ்வரத்தைச் சேர்ந்த 12 குடும்பங்களுமே நிவாரணம் பெறவுள்ளன. (ஒ-10)

# முழு அமைதியின் பின்பே அமைதிப்படை திரும்பும்

## இப்படிச் சொல்கிறார் ராஜீவ்

சென்னை ஜன 12

இலங்கையில் முழு அமைதி ஏற்பட்ட பின்னரே அமைதிப்படை தாயகம் திரும்பும்.

பிரதமர் ராஜீவ் காந்தி இப்படி நாகர்கோவிலில் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மாநிலம் அமைந்துள்ளது; அமைதியும் நிலவுகிறது என்றும் பிரதமர் செய்தியாளரிடம் மேலும் சொன்னார். (ஒ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

3' அகலமான பேப்பர் ஒரே தடவையில் போடக் கூடிய கையால் இயக்கும் "றூளிங் மெசின்" Ruling Machine' (சிலமாதங்கள் மட்டும் பாவனையில் இருந்தது.) விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. இளையகுட்டி "ஸ்ரீ ரஞ்சனி" மணற்பகுதி, புத்தூர். (8668)

நல்ல நிலையில் உள்ள Honda E 3500 ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க:- V. K. Rajaratnam, Stanley Road, Jaffna. (8672)

புதிய மொடல் நிரெொண்டிஷன் M.D 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பாத்திமா சென்ரர், 144, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (8?65)

தளபாடங்கள் Guitar மேசை அலுமாரி, கட்டில், Show-case கண்ணாடி மேசை, நிலைக்கண்ணாடி, Toaster, Fan, Dinner Set, Glassware, விருந்தை செற்றி, Formica கவுண்டர் Iron Safe, Mixer மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 343, பருத்தித்துறை வீதி, நல்லூர் (அரசடி சந்தியருகில்) [8677]

**A/L 89 இரசாயனம்**

108 Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் புதிய பிரிவு ஆரம்பம்; (15-1-89) ஞாயிறு 12-30 p m Organic and Inorganic சனி, ஞாயிறு 12-30 p.m to 2-30 p m பௌதிக இரசாயனம் ஆரம்பம் 17-1-89 செவ் 6 45 a.m (செவ், வியா, 6-30 a m to 8-15) a m நேரில் விபரங்கள் [8870]

**வீணைக் குடம் (சுரக்காய்) விற்பனைக்குண்டு**

வீணைக்குடம் (சுரக்காய்), அலுமினியப் பித்தளைக்குண்டு. சிவன் மாளிகை, மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (8866)

**கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm**

Uplands farm ஒவ்வொரு வாரமும் வெள்ளை சேவல்குஞ்சு கறுப்பு (பிலிமத) வரி சேவல் குஞ்சு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல:9 சந்தையாலேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) (8853)

**BRIDE**

Well Educated 31 years aged good christian graduate Teacher Seeks a suitable partner from a very good christian Family. Preferably committed Christian Give details to C R. Arulampalam, "Retnapathy" Karaveddy west, Karaveddy (8869)

**சேவை**

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக் கடிதங்கள் Biodata போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல 19, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1271)

**ரோனியோ**

தரமான ரோனியோ பிரதிகளை (தமிழ், ஆங்கிலம் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்: "ஷப்ரு" சேவைப்பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C1272)

**தரமான வீடியோ ஒடியோ**

கசற்றுகளை றெக்கோடிங் செய்வதற்கும், தரமான புதிய திரைப்படங்களை உடனுக்குடன் வாடகைக்குப் பெறுவதற்கும் 'லிலியா' உங்கள் நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் ஏற்றபடி சேவையாற்றுகிறார்கள் Liliya Video Club and Audio Recording Bar, 2, Model Market Upstair, Thirunelvely. (8859)

**தவறிவிட்டது**

7-1-89 அன்று K.K.S றோட்டில் களர் படச்சுருள் ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8868)

செல்லப்பா திருச்சிற்றம்பலம், பிள்ளையார் கோவிலடி, மாதகல் இந்த விலாசமுடைய Railway பென்சன் காட்டையும் அடையாள அட்டையையும் கன்னொட்டி மக்கள் வங்கியில் தவற விட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8867)

பொ. கனகரட்டினம் எழுதிய எனது அடையாள அட்டை இல 481650534V நுணாவிலுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்திலோ, அல்லது பொ. கனகரட்டினம், பலாலி வீதி, கனகு கராஜ், திருநெல்வேலியிலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8668)

**தேவை**

7ஆம், 6ஆம் ஆண்டு களுக்குரிய கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகியவை இல்லத்திற்கு வந்து கற்பிக்கக் கூடிய ஒருவர் தேவை. தொடர்பு நேரில்:- த. கோபால பிள்ளை, 141/3, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (8863)

**மணமகன் தேவை**

G. C. E. (O/L) வரை படித்த 3? வயது நிரம்பிய சைவ ... பெண்ணுக்கு ... வரனைத் தேடுகின்றார் ... திருமண ... பேசித் ... க்கப்படும். விபரங்களுக்கு ... 423, C/o ... உதயன் (8854)

# முஸ்லிம்கள் பற்றிப் பேச பேரினவாத கட்சிகளுக்கு உரிமை இல்லை

## அஷ்ரப் கூறுகின்றார்

அம்பாறை, ஜன. 12 முஸ்லிம் சமுதாயத்தைப் பற்றிப் பேசவும் முஸ்லிம் சமுதாயத்துக்காகக் குரல் கொடுக்கவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே உரிமை உண்டு. வேறு எந்த பேரினவாதக் கட்சிகளுக்கும் உரிமை கிடையாது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப். எம். எச். எம் அஷ்ரப் மேற்கண்டவாறு கூறினார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டம் ஒன்று அண்மையில் அக்கரைப்பற்று நகரில் நடைபெற்றது

சட்டத்தரணி ஜனாப். அஷ்ரப் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

இலங்கையின் வரலாற்றில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரு தடவைகள் ஆட்சியில் இருந்துள்ளது.

ஆனால் அந்தக் கட்சி தன்னந்தனியாக நின்று ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்கவில்லை.

இன்று பொது முன்னணியும் சின்னாபின்னமாக உடைந்து இல்லாமல் போய்விட்டது

நாற்பதுக்குமேற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் அதனைவிட்டுப் பிரிந்து திரு. ருக்மன் பக்கம் போய் விட்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது தீர்க்க தரிசனமான நிலைப்பாடு, முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலத்துக்குப் பெரும் பயனாக அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினது, அதன் அடிவருடிகளினதும் நலன் காப்பதற்கென்று செயல்படாது இந்த நாட்டின் சகல இன மக்களுக்கும் பொதுவான ஜனாதிபதி என்ற நிலைப்பாட்டில் திரு பிரேமதாச செயல்படுவாரென்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது

இப்படி அவர் கூறினார். (இ-14)

## வளர்மதி வெள்ளிவிழா

கொக்குவில், ஜன 12 கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையமும் முன்னேற்றக்கழகமும் இணைந்து 'ஷப்ரு' வின் ஆதரவுடன் நடத்திய எறிபந்தாட்டச் சுற்றுப்போட்டி, உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கரம் சுற்றுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கும் வெற்றியீட்டிய கழகங்களுக்குமான பரிசளிப்பு எதிர்வரும் 14 ஆம்திகதி வளர்மதி சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழாவின் போது நடைபெறவுள்ளது

12ஆம் 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் முதல் நாள் சிறுவர் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

முதல் நாள் நிகழ்ச்சியில் சிவநெறிக் காவலரும், ரோட்டரிக் கழக கௌரவ அங்கத்தவருமான திரு. க. கனகராஜா கலந்துகொண்டு சிறுவர்களுக்கு புத்தகங்கள், பரிசில்களை வழங்குவார். இரண்டாம் நாள் சிறப்பு நிகழ்ச்சியாக இராதா கிருஷ்ணனின் வயலின் சோலோவும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

பஞ்சமூர்த்தி கானமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும்.

மூன்றாம் நாள் நிறைவு நிகழ்ச்சியாகசமுதாயத்தைத் திருப்திப் படுத்த சிறந்தது காதல் கல்யாணமா? நிச்சயதார்த்தத் திருமணமா? எனும் தலைப்பில் பட்டிமண்டபம் நிகழும். கம்பன் கழக அங்கத்தினர் பங்கு பற்றும் இப் பட்டி மண்டபத்துக்கு தலைவர்திரு. இ. ஜெயராஜ்நடுவராக இருப்பார்.

வெள்ளிவிழாவையொட்டி 'வெள்ளிவிழா' மலர் ஒன்றும் வெளியிடப்படும். (க-69)

## நிதி உதவி செய்யுமாறு வர்த்தக சங்கம் கோரிக்கை

வட்டக்கச்சி, ஜன 12 கிளிநொச்சி பொதுச் சந்தையிலுள்ள பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மீண்டும் கட்டடங்களை அமைக்க நிதி உதவி வழங்க வேண்டும். கிளிநொச்சிக்கு நவீன சந்தை பொதுச் சந்தை ஆகியவற்றை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கிளிநொச்சி ... நகர் சங்கம் மேற்கண்ட கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முன் வைத்துள்ளது.

வன் செயல் நடந்த காலத்தில் இருந்து இன்று வரை கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு எதுவித உதவியும் அரசினாலோ அல்லது பொது ஸ்தாபனங்களினாலோ வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

**சுவாமி ஜெயந்தி**

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமி ஜெயந்தி வைபவம் அண்மையில் பண்ணாகம் ப. சி. செல்வநாயகம் இல்லத்தில் நடைபெற்றது

அத்தருணம் பூசை வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெற்றன (க-28)

## ஒழுங்கைகள் சுருங்குகின்றன

கோப்பாய், ஜன 12 தற்போது குடாநாட்டின் பெரும்பாலான உள்ளூர் ஒழுங்கைகளின் அகலம் முன்னைவிடக் குறைந்து வருகின்றது

உள்ளூர் ஒழுங்கைகள் குறிப்பிட்ட அளவு அகலம் உடையவையாக இருக்க வேண்டுமென உள்ளூராட்சி திணைக்களம் ... பாலானோர் கடைப்பிடிக்காததினால் ஒழுங்கைகளின் அகலம் சுருங்குகின்றன. (ச-72)

## புற்றுநோய் விடுதிக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம் ஜன 12 தெல்லிப்பளை வறுத்தலை விளானில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புற்றுநோயாளர்களுக்கான விடுதியை பராமரிப்பதற்கு பொதுமக்களிடமிருந்து நிதி, பொருள் உதவிகள் எதிர்பார்க்கப்படுவதாக வடமாகாண புற்று நோயாளர் சங்கத் தலைவர் டாக்டர் மா. ஜெகநாதன் தெரிவித்தார்.

உதவ விரும்புவோர் 383 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## இசை, நடன, நாடக போட்டி பெப்:18 இல்

மானிப்பாய் ஜன 12 கடந்த வருடம் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் நடத்த முடியாமல் போன மாவட்ட ரீதியிலான இசை, நடன, நாடகப் போட்டிகளை இவ் வருடம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி நடத்துவதென இசை நடன நாடக போட்டிகளுக்குப் பொறுப்பான சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

அதற்கு முன்னதாக கோட்டக்கணி — வட்டார அமைப்பிலான இசை நடன, நாடகப் போட்டிகள் நடத்தப்படும் என்றும் அதில் தெரிவு செய்யப்படுபவர்கள் மாவட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவர் என்றும் திரு. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். [ச-90]

## சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கக் கோரிக்கை

மண்டைதீவு, ஜன 12 அல்லைப்பிட்டிக் கிராமத்தில் புதிய சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பித்து இப்பகுதி நோயாளர்களுக்கு உதவுமாறு யாழ் சுகாதாரப் பணிப்பாளரிடம்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக அல்லைப்பிட்டி மத்திசனசமூக நிலையத் தலைவர் திரு. என் சச்சிதானந்தன் மகஜர் ஒன்றை யாழ் சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளார். [க-88)

## காரைநகரில் குடிதண்ணீர்ப் பிரச்சினை

இம்முறை பருவ மழை இல்லாத காரணத்தால் காரைநகரில் நன்னீர்ப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

மின்சாரம் இல்லாததினாலும் இங்கு நீர் விநியோகத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது, (க-73)

## அணைக்கட்டு வேலை

தர்மக்கேணிக்குள அணைக்கட்டு வேலைகள் பூர்த்தியாகி உள்ளன என்று சமநலச் சேவைப் பெரும்பாகஉத்தியோகத்தர் எஸ். பரமசிவராசா தெரிவித்தார்.

அத்துடன் முகமாலை இந்திராபுரத்திலுள்ள குளத்தை ஆழமாக்கி அணைக்கட்டு வேலையைச் செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. (ச-217)

அதிபர்கள்;

# கல்வி விரயங்களைத் தடுத்து உச்ச பயனைப்பெற வேண்டும்

## அதிபர்கள் கருத்தரங்கில் பிரதம கல்வி அதிகாரி உரை

சுன்னாகம், ஜன. 12 மிகக் குறைந்த அளவிலான மூலவளங்களோடு உச்சநிலைப் பயனைப்பெறுவதற்கு முயற்சி செய்யும் அதிபர்கள் கல்வி விரயங்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். முதல்நிலை முகாமையாளர்களாகக் கடமைபுரியும் அதிபர்கள் நிர்வாகிகளாக மட்டுமல்லாது கல்வியாளர்களாகவும் கடமையாற்ற வேண்டும்

யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தின் பொது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருக்கும் பிரதம கல்வி அதிகாரி திரு சோமசுந்தரம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் தனஞ்செயன் இக் கருத்தரங்குக்கு தலைமை வகித்தார்.

திரு சோமசுந்தரம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ் மாவட்டத்தில் சகல வகையிலும் பற்றாக்குறை நிலவுகிறது.

அதனைமட்டும் பெரிதாக்கிக்கொள்ளாது எமது கடமைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதிபர் பாடசாலையில் நடைபெறும் சகல கருமங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டியதுடன் பாடசாலைபற்றிய பூரண அறிவுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்துக்குத் தலைமைவகித்த கல்வி அதிகாரி திரு தனஞ்செயன் தனது உரையில கூறியதாவது:

ஆரம்பத்திலிருந்தே கட்டுப்பாடாகச் சுமுகமான முறையில் பாடசாலைகளைக் கொண்டு நடத்தும் காரணகர்த்தாவாக அதிபர் இருக்கிறார்.

மாணவர்களை மையமாக வைத்துச் செயற்படவேண்டும் ஆசிரியர்கள் அனைவரதும் சேவையை அவரவர்களுக்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாண்டு பெற்றுக் கொள்ளவேண்டும்.

இப்படி அவர் கூறினார். [ச 27]

## சுகமளிக்கும் பிரார்த்தனை

"அவர் இயேசு நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்"

**அருள்நாதர் இயேசுவின்**

சுகமளிக்கும் வல்லமையை நாடித்தேடும் யாவரையும்

அன்புடன் வரவேற்கின்றோம்.

மதுபான, போதைவஸ்து, உளரீதியான தாக்குதல்களுக்கு அடிமையானவர்களுக்கு

**சுகமளிக்கும் பிரார்த்தனைக் கூட்டம்**

**நாள்: 13 - 01 - 1989 (வெள்ளிக்கிழமை)**

**காலம்: காலை 10 மணி**

**இடம்: அப்போஸ்தல விசுவாச சபை விடுதலை மண்டபம்**

45, பூங்கா வீதி—குருநகர், யாழ்ப்பாணம்

பிரார்த்தனை நடத்துபவர்:

**சகோதரன் ஏ- ஜோண்பிள்ளை**

நீங்களும் வாருங்கள்!

உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள்!

(884?)


# கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Computer Programming and Data Processing - Basic**

6 மாத காலப் பயிற்சி

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

**ஆரம்பம்: 21-01-1989**

[சனி காலை 9. 00 மணி]

**கட்டணம்: ரூபா 2000/-**

முக்கிய கவனிப்பு

மின் விநியோகத்தடை காரணமாகத் தங்கள் கொம்பியூட்டர் செய்முறைப் பயிற்சிகளைத் தொடர முடியாமல் போன எமது பழைய மாணவர்கள் மீண்டும் தங்கள் பயிற்சிகளைத் தொடரும்படி வேண்டப்படுகின்றார்கள்.

AAT (Sri Lanka) STAGE II

[சனி, ஞாயிறு வகுப்புகள்]

**ஆரம்பம்: 21-01-1989**

(சனி காலை 9. 00 மணி)

**Diploma in Computer Programming**

(Basic)

3 மாத கால விசேட தீவிர துரிதப்பயிற்சி

சனி, ஞாயிறு வகுப்புகள்

அண்மையில் தான் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இன்னும் சில தினங்களுக்கு மாத்திரம் இவ்வகுப்புக்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

**கட்டணம்:- மாதம் ரூபா 300/-**

**CIMA, AAT (Sri Lanka) STAGE I, IAB**

வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

# HARVARD INSTITUTE

Successors of

# CANTABIA INSTITUTE

(Sister Organisation of Oxonia, Colombo)

&

(Pioneers in Computer Education)

**NO. 21, MAIN STREET, JAFFNA.**

[2 ஆம் குறுக்குத் தெரு வழியாக வரவேண்டும்]

(C-1298)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**I. E. T. Technical Institute**
11 B, Stanley Road, Jaffna.
[ விவேகானந்தா அச்சகத்திற்கு முன்பாக மேல்மாடி ]
**மணிக்கூடுகள் திருத்துனர் பயிற்சி**
ஆரம்பம் : 16-01-1989
[C/1245]

## T. V. ரவல்ஸ் & ருரிஸ்ட்
பெருமையுடன் வழங்கும்
உடனடி வேலைவாய்ப்புகள்
**சவூதி அரேபியா**
SAUDI ARABIA ALRAJHI CO:

| | | |
|---|---|---|
| (1) ஸ்ரீல் பிற்றர் | சம்பளம் | 650 SR |
| (2) கூரை ஓடு பிற்றர் | ,, | 650 SR |
| (3) மேசன் | .. | 650 SR |
| (4) தச்சு வேலையாட்கள் | .. | 650 SR |
| (5) பிளம்பர்ஸ் | .. | 650 SR |
| (6) டீசல் மெக்கானிக் | .. | 650 SR |
| (7) பெற்றல் மெக்கானிக் | .. | 650 SR |
| (8) சாரதிகள் H. V. | .. | 650 SR |
| (9) ஓட்டோ எலக்ரிஷன் | .. | 650 SR |
| (10) எலக்ரிஷன் | .. | 650 SR |
| (11) மெக்கானிக் | .. | 650 SR |
| (12) வெல்டர்ஸ் | .. | 650 SR |
| (13) Civil Supervisor | , | 800 SR |
| (14) கிளீனர்ஸ் 300பேர் | .. | 400 SR |

தங்குமிடம் அளிக்கப்படும்.
Food allowance will be paid
வயதெல்லை (Age Limits) 21 — 48
**குவைத்நாட்டில் வேலைவாய்ப்பு**
300 கிளீனர்ஸ் சம்பளம் 35 KD
வயதெல்லை 18 — 48 வரை
No Food தங்குமிடம் அளிக்கப்படும்
முக்கிய குறிப்பு !
எமது காரியாலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணிமுதல் 5.00 மணி வரை
ஞாயிறு காலை8 00 மணிமுதல் 2 00மணிவரை
**T.V. Travels & Tourist**
BROWN ROAD,
(Railway Station Front)
KOKUVIL:
(C/1255)

## தேவை
யாழ்ப்பாணம் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துச் செய்த சவூதி அரேபியாவில் பணிபுரியும் 40 வயதுடைய மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. (விவாகரத்துச் செய்தவராயினும் கவனிக்கப்படும்.) புகைப்படம் அடங்கிய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். (கொழும்பில் தொடர்பு கொள்ளக்கூடிய முகவரி இருப்பின் குறிப்பிடவும்
தொடர்பு: 429' C|o. உதயன்
(C/1283' யாழ்ப்பாணம்.

## SCIENCE CENTRE
KARAVEDDY
**A/L 89** பகல் நேர வகுப்பு
அலகு ரீதியான வினு விடை வகுப்பு
இரசாயனம் — Mr. Bar, தில்லைநாதன்
செவ், வியா, சனி 2-3
பௌதிகம் — வர்ணம்
திங். புதன், வெள்ளி 7-30 8-30
கணிதம் — நல்லையா
திங், புதன், வியா 9-11
விலங்கியல் — நாகநாதன்
வெள்ளி, 4-6
தாவரவியல் — குகாதரன்
செவ்வாய், 2-4
**ஆரம்பம்: 13-1-1989**
[வெள்ளி, 4-6 விலங்கியல்]
( 834)

## சிக்மா பம்ப்ஸ்
மண்ணெண்ணெயில் இயங்கும் விலியர்ஸ். குபோடா என்ஜின் பொருத்தப்பட்ட சிக்மா பம்ப்ஸ் இப்பொழுது கையிருப்பில் உண்டு. குறிப்பிட்ட தொகையே வந்திருப்பதனுல் உங்கள் தேவைகளை உடனே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.
விலியர்ஸ் என்ஜின் பொருத்தியது ரூபா 7500.00
குபோடா என்ஜின் பொருத்தியது ரூபா 9300.00
**யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்**
274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
தொழிற்சாலை:
நாவற்குழி - கைதடி. (C/1249)

## சமய நிகழ்ச்சிகளில்

### வற்ருப்பளை கும்பாபிஷேகம்
ஓட்டுசுட்டான் ஜன 12
வற்ருப்பளை ஸ்ரீ கண்ணகி அம்பாள் கோயில் புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக விழா எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெறும்.
தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45நாட்களுக்கு நடைபெறும். (இ-113)

### சித்திரத் தேர்
மண்டைதீவு, ஜன 12
மண்டைதீவு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.
சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கவிருக்கும் இச் சித்திரத் தேரை பிரபல சிற்பாசிரியர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையிலான சிற்பவல்லுனர் குழு அமைத்து வருகின்றது.
தேர்த் திருப்பணிச் சபை ஒன்றும் திரு. க. மாணிக்கலிங்கம் தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.
(88)

### சபாரத்தினம் சுவாமிகள் குரு பூசை
யாழ்ப்பாணம், ஜன 12
திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் 1ஆம் ஆண்டு நிறைவு குரு பூசை மறவன் புலவு சுவாமிகளின் நினைவாலயத்தில் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறும். (க)

### பல்கலைக்கழக மாணவர் மன்றங்கள்
கொக்குவில் ஜன 12
யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவர் மன்றத் தலைவராக செல்வன் பி.குட்டிசிங்கம் செயலாளராக செல்வன் ஏ. வின்ஸ்லோஸ் தனாதிகாரியாக செல்வன் அருளுதயன்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன் பத்துப் பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
கலைப்பீட மாணவர் மன்றத் தலைவராக செல்வன் சபா. இராமகிருஷ்ணனும் செயலாளராகசெல்வன்கே.எஸ். ஜெயக்குமாரும் தனாதிகாரியாக செல்வி எஸ் கைலாசபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
பத்துப் பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவாகியுள்ளது.
மருத்துவ பீடத்திலிருந்தும் பதினொருபேரை உள்ளடக்கிய மாணவர் மன்றம் தெரிவு செய்யப்பட்டுள்ளது
தெரிவு செய்யப்பட்ட இந்த மூன்று பீட மாணவர் மன்றங்களிலிருந்தும் யாழ் பல்கலைக்கழக பொது மாணவர் மன்ற பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்கின்றனர்.
(க-69)

+
J. M. J.
அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!
உங்கள் பிரயாண ஒழுங்குகளை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வகுத்துத் தருவதில் வல்லவர்கள் என்ற பெயர் பெற்ற
**உங்கள் பயண அமைப்பாளர்**
**எஸ். பி. அன்ரன்**
வழங்கும் நற்செய்தி!
★ புதுவருடத்தில் ★
★ ஜெர்மனி
★ பிரான்ஸ்
★ சுவிஸ்
★ இத்தாலி
★ அவுஸ்திரேலியா
ஆகிய நாடுகளுக்கு நீங்கள் பத்திரமாகவும் நம்பிக்கையாகவும் பயணம் செய்வதற்கு நிச்சயமான பயண ஒழுங்குகளை அமைத்துத் தருகின்றோம்.
மேலும்
★ யோர்தான்
நாட்டில் விவசாயப் பணியாட்களாக. (Farm Helpers)
★ சவூதி அரேபியா
நாட்டில் சுத்திகரிப்பு பணியாட்களாகவும் Cleaners ஆகவும் பணியாற்றுவதற்கு
வேண்டிய உடனடிப்பயண ஒழுங்குகளைச் செய்து தருகிறோம். மேலும் விபரங்களுக்கு உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளுங்கள்:
**எஸ். பி. அன்ரன்**
No. 648 1|3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
ஒரு மகிழ்ச்சியான செய்தி!
சவூதி அரேபியாவில் பணிபாற்றி விட்டு நாடு திரும்பியுள்ள அன்பர்கள் தங்கள் சவூதி இன்சூரன்ஸ் GOSI. பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைடியுள்ளது இதற்கான படிவத்தை எமது அன்பர்களுக்கு வழங்குகிறோம் தேவையானவர்கள் எமது யாழ் அலுவலகத்தில நேரில பெற்றுக் கொள்ளலாம்.
(C 1263)

## ★ தரமான கலர்ப்படப் பிரதிகள் ★
✱ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்
**கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்**
நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல் 3 முதல் 5 நாட்களில் விநியோகம்




**ஷப்ரூவை** நாடுங்கள்
**ஷப்ரூ**
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 22073

யாழ் / கனகரத்தினம் ம. ம. வி.
## கேள்வி விளம்பரம்
பின்வரும் தளபாடங்கள் செய்வதற்கு கேள்விக் கூறுகள் 25-01-89க்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் மேசை | — 10 |
| 2. | சாப்பாட்டு மேசைகள் | — 10 |
| 3. | மண்டப இருக்கைகள் | — 20 |
| 4. | மாணவர் கதிரை | — 50 |
| 5 | மாணவர் மேசை | — 50 |

விபரங்களை நேரில் பெறவும்
மு. இராமலிங்கம்
அதிபர்.

பருத்தித்துறை ப நோ. கூ, சங்கம் [வ/து]
## அறிவித்தல்
எம்மிடம் சுமார் 7500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன
வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்புவைப்பு பணமாகரூபா. 250/- ஐயும். கேள்விப் பத்திரத்திற்கு ரூபா. 10/-ஐயும் சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைச் சங்கவேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
1989. 01. 18 புதன்கிழமை காலை 8 00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
பொதுமுகாமையாளர்,
பருத்தித்துறை ப. நோ கூ சங்கம்.
(C/(1287) 1989- 01- 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:-
13- 04- 1954

இறைவனடியில்:-
15- 12 1988

திதி:-
13- 01- 1989

அமரர்
**சுரேந்திரநாதன் ஜெயப்பிரகாசம்**
J. P என அன்பாக அழைக்கப்பட்டவர்
(Marine Engineer)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இல 13, பதினொராம் ஒழுங்கை, கொட்டாஞ்சேனை என்ற முகவரியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி சுரேந்திரநாதன் சரஸ்வதி
குடும்பத்தவர்கள்.

''இரங்கூன் இல்லம்,''
பருத்தித்துறை. (C/1278)

## 31ம் நாள் நினைவஞ்சலி




**திரு. நா. அன்ரனி [அந்தோனி]**
(அரச சுகாதார சேவைப்பகுதி, யாழ்ப்பாணம் வைத்தியசாலை)

மலர்வு: 19-9-1944
உதிர்வு: 13-12-1988

பாசம் நிறைந்த தந்தையாய்
சிவாஜியின் பிரியனாய் உறவினருக்கும்,
நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும்
இனியவனாய் வாழ்ந்து இறைவனடி
இணைந்து விட்டீர்!
உமது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்.

வலம்புரம்,
பலாலி தெற்கு,
வயாவிளான். (8680)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட
**கணேஸ் - சுதா (சிறி)**
(சீமெந்துக் கூட்டுத்தாபன மின்னியலாளர்)

அன்னையின் மடியில்: 28 - 4 - 1963
ஆண்டவன் அடியில்: 28 - 11 - 1988

இன்று நாங்கள் உமது ஞாபகத்தை மீட்டிப்பார்க்கவில்லை, ஏனெனில் எங்கள் மனங்களில் நீர் மனனஞ் செய்யப்பட்டுவிளீர். எங்கள் சுதாவே! எம்மால் அழ முடியவில்லை. ஏன்? உமது இழப்பால் எங்கள் இதயங்கள் கல்லாகிவிட்டன. சுதா! நீர் இல்லை என்பது கசப்பான உண்மை தான் ஆனல் நீர் இருக்கிறீர் என்பது எமக்குள் ஓர் பொய்யான பிரமை எமையெல்லாம் எம் உயிர் உள்ளவரை வாட்டுமே.

பிறந்தவர்கள் இறப்பது நியதியாயிருந்தாலும் கூட எம்மனதில் நினைவாக நிற்பவர்கள் ஒரு சிலரே!

உன்பிரிவால் துயருறும்:
பெரியமாமி, மைத்துனர்மார்,
மைத்துனிமார், அக்காமார்,
அன்பு மருமக்கள்.

''மணிபவனம்''
சண்டிலிப்பாய். (8675)

## கேள்வி அறிவித்தல்

### பிரதேச கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.
### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேச கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஜனவரி மாதம் 27ஆம் திகதி (27. 01. 89 வெள்ளிக்கிழமை) முற்பகல் 10. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி பிற்பகல் 2. 00 மணி வரை (24. 01. 89) செவ்வாய்க்கிழமை வரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமான ரூபா ஐம்பதும் (ரூபா 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி (27-01-89) காலை 10. 30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகம் அளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து (10) பத்து நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் தெரிவு மறு அறிவித்தல் இன்றி இரத்து செய்யப்படும்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்

பிரதேச கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1989. 01. 10

வெ. சபாநாயகம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | தந்தை செல்வா ஆரம்ப பாடசாலை காங்கேசன்துறை | மேல்மாடிக் கட்டிடம் 120' . 0'' x 25: . 0'' | 1,200,000/- |
| 2. | யா/வசாவிளான் றோ. க. த. க. பாடசாலை வசாவிளான் | மிகுதி வேலை, சலகூடம் பெருந்திருத்த வேலை | 600,000/- |
| 3. | யா/வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தி. வசாவிளான் | ,, | 100,000/- |
| 4. | யா/ஒட்டகப்புலம் றோ. க. த. க. பாடசாலை வசாவிளான் | கட்டிட வேலை 40' . 0'' x 20' . 0'' | 100,000/- |
| 5. | யா/டக்டர் தியாகராசா ம.ம.வி. காரைநகர் | பெருந்திருத்த வேலை | 100,000/- |
| 6. | யா/வசாவிளான் ம. ம. வி. வசாவிளான் | கட்டிட வேலை 1 40' . 0'' x 25' . 0'' | 800,000/- |
| 7. | யா/வதிரி திருஇருதய கல்லூரி ரவெட்டி | மேல்மாடி கட்டிடம் 90' . 0'' x 25 ' . 0'' | 1,200,000/- |
| 8. | யா/நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை | பெருந்திருத்த வேலை | 1,000,000/- |
| 9. | யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை | மேல்மாடி படி . 1, 2 175' · 90'' x 25 ' . 0'' | 1,300,000/- |
| 10. | யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை | மேல்மாடி - படி 1, 2 107' . 0'' x 25' . 0'' | 1,000,000/- |
| 11. | யா/வடஇந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை | மிகுதி கட்டிட வேலை 100' . 0'' x 20' 0'' | 500,000/- |
| 12. | யா/வரணி மகா வித்தியாலயம் வரணி | பெருந்திருத்த வேலை | 200,000/- |
| 13. | யா/கம்பர்மலை அ. த. க. பாடசாலை வல்வெட்டித்துறை | ,, | 200,000/- |
| 14. | யா/விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி | மூன்றுமாடி கட்டிடம் 90'. 0'' x 25' . 0'' | 1,200,000/- |
| 15. | யா/விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி | இருமாடிக் கட்டிடம் 48' . 9'' x 25' . 0'' | 800,000/- |
| 16. | யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தி. கீரிமலை | இருமாடிக் கட்டிடம் 49' . 0'' x 25' . 0'' | 500,000/- |
| 17. | யா/பொன்பரமானந்தா வித்தியாலயம் தெல்லிப்பழை | மேல்மாடிக் கட்டிடம் 49' . 0'' x 25' · 0'' | 600,000/- |
| 18. | யா/கட்டுவன்புலம் ம. வி. தெல்லிப்பழை | பெருந்திருத்தவேலை இருமாடிக் கட்டிடம் 40' . 0'' x 25' . 0'' | 400,000/- |
| 19. | யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி. அல்வாய் | கட்டிட வேலை 80' . 0'' x 20' 0'' | 400,000/- |
| 20. | யா/இடைக்காடு ம. வித்தி: அச்சுவேலி | பெருந் திருத்தவேலை | 100,000/- |
| 21. | யா/புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலை புன்னாலைக்கட்டுவன் | ,, | 150,000/- |
| 22. | யா/சென் தோமஸ் றோ. க. மகளிர் பாடசாலை பருத்தித்துறை | ,, | 100,000/- |
| 23. | யா/வசாவிளான் ம. ம. வி. வசாவிளான் | நீர்த் தாங்கி | 100,000/- |
| 24. | யா/உடுப்பிட்டி மகளிர் பாடசாலை உடுப்பிட்டி | மிகுதி கட்டிடவேலை 100' . 0'' x 20' . 0'' | 300,000/- |

(C1282)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

(12 - 01 - 1989)



**செல்வி வித்தியா தனபாலசிங்கம்**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 8ஆம் ஆண்டு மாணவி)

மலர்வு: 22 - 01 1975
உதிர்வு: 13 - 12 - 1988

வித்தியா ஒரு வித்தகி! கலைவாணியின் கையில் இருக்கும் மரகத வீணை எங்கள் வீட்டில் நாதமாக, ஓசை ஒலியாக விளங்கியவள். நாதம் கேட்காது. எங்கள் செவிகள் செவிடாகியதோ? வீணையின் நரம்புகள் அறுந்து போனதுவோ?

15 - 12 - 88 ஆம் திகதி அன்னாரது மரணச்சடங்கில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் 9-11-88இல் கச்சேரியடி குண்டுவெடிப்பு விபத்தில் காயமடைந்த பொழுது உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்த கருணை உள்ளம் படைத்த பெரியவர்களுக்கும் யாழ்/அரசினர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை அளித்து உயிரைக் காக்கும் பணியில் விரைவாய்ச் செயற்பட்ட வைத்திய நிபுணர்களுக்கும் இரத்த வங்கி உத்தியோகஸ்தர்களுடன் ஏனைய ஊழியர்களுக்கும், பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

12 - 01 - 89இல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

சி. தனபாலசிங்கம்
சோதீஸ்வரி
குடும்பத்தினர்.

உடன் கந்தசாமி கோயிலடி,
மருதனார்மடம். [8674]

## WALK IN INTERVIEW
## 5 STAR HOTEL

**Saudi Arabia**

Immediat Vacancies age - 21-40 years, Interview will held in Colombo on 17. 1. 89 onwards.

English Speaking
Hotel Waiters - Males only

## VACANCIES IN SAUDI ARABIA

| | | SALARY |
|---|---|---|
| 1. | Pipe Fitter Foreman | SR 800 |
| 2. | Sewage Water Treatment, Plantforeman | SR 800 |
| 3. | Pipe Line Supervisor | SR 1200 |
| 4. | Sewage Water Treatment, Plant Operater | SR 650 |
| 5. | Saftey Engineer | SR 1300 |
| 6. | Pipe Fitter | SR 650 |
| 7. | Heavy Duty Equipment Operator | SR 700 |
| 8. | Steel Fixer | SR 700 |
| 9. | Sheet Fixer | SR 700 |
| 10. | Mason | SR 650 |
| 11. | Carpenter | SR 650 |
| 12. | 300 Cleaners | SR 400 |
| 13. | Welders | SR 650 |

சவூதிக்கு நேர்முகப் பரீட்சை:-
13, 14, 15, 16.1.89 வரை நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவேண்டும். எனவே எம்முடன் கடவுச்சீட்டு. 3 போட்டோக்கள், தொழில் அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
31. 1. 89 இவர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் நடைபெறும்.

குவைற் நாட்டில்
## வேலை வாய்ப்பு

500 தொழிலாளர்கள்
சம்பளம் 35 KD
உணவு இல்லை.
தங்குமிடம் அளிக்கப்படும்.
வயது - 18 — 48 வரை

## T. V. TRAVELS
BROWN ROAD,
KOKUVIL.
(Railway Station Front)
(C/1292)

## SPACE AVAILABLE

NEW BUILDING
WITH ALL FASCILITIES
1st FLOOR
2nd FLOOR
Each floor approximately 700 sq. Feet, situated at Hospital Road,
(Closer to Bus stand)
Apply No: 25,
C/o, Uthayan, Jaffna
(8681)

## 61 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு.
1939.04.16

இறப்பு:
1988.11.10

**திரு. கனகு தவத்துரை**

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
மனைவி:- கமேந்திராதேவி,
மகன்:- மனோகரதாசன், குகதாசன்,
மகள்:- நிர்மலாதேவி (அவிஸ்லாந்து)
மகள்:- யசோதாதேவி, அனுசூயாதேவி,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்,
முத்தமிழ் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (8806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியான சம்பவத்துக்குப் பின்

# மறைந்திருந்த பயங்கரம்

## நைஜீரியாவில் பீப்பாய்களில் வந்து குவிந்த நச்சுத் திரவம்

இரசாயனஉற்பத்தி இன்று உலகில் அதிகரித்து வருகிறது. விஞ்ஞானம் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் இரசாயனப் பொருள்கள் உற்பத்தித் துறைக்கு மாத்திரமல்லாமல் ஆயுதத் தயாரிப்புத் துறைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இரசாயனஉற்பத்தி மேற் கொள்ளப்படும்போது அவற்றிலிருந்து பலவகையான கழிவுப் பொருட்கள் வெளியாகின்றன. இந்தக் கழிவுப் பொருள்கள் மனித சமுதாயத்திற்கும், இயற்கை வளத்துக்கும்பேராபத்தைவிளைவிக்கக்கூடியனவையாகவே இருக்கின்றன. இத்தகைய கழிவுப் பொருள்களை அண்டை நாடுகளில் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அவற்றை உற்பத்தி நாடுகள் வேறு நாடுகளில் கொட்டிவிடுவதும் உண்டு. அத்தகைய ஒரு சம்பவத்தைஎடுத்துக்காட்டுகிறது இந்தக் கட்டுரை.

நைஜீரியாவிலுள்ள கோகோ என்ற இடம் கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஒரு கரையோரத் துறைமுகப் பிரதேசமாகும்.

இந்தப் பகுதியில் விவசாயம் செய்து பிழைக்கும் ஒரு சில வறிய குடும்பங்களே வசித்து வந்தன.

முன்னர்இந்தத் துறைமுகத்தினூடாகத்தான் அடிமை வியாபாரம் நடந்து வந்தது. அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தோருக்கு அன்று இந்தத் துறைமுகம் ஒருசொர்க்க பூமியாகவே இருந்தது.

அப்போதெல்லாம் இந்தத் துறைமுகத்துக்குப்பலநாடுகளிலிருந்தும் பலவிதமான கப்பல்கள் வந்து போவது வழக்கம்.

ஆனால் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்ட பிறகு இங்கே கப்பல்கள் வருவது குறைந்து விட்டது

காலப் போக்கில் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை ஒரு கப்பல் மாத்திரமே அந்தத் துறைமுகத்துக்கு வந்தது

இப்படி கப்பல் வரும்போது அந்தப்பகுதியில் உள்ள ஆண்களுக்கு கப்பல்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் வேலைகள் கிடைக்கும்.

அப்போதெல்லாம் அவர்கள் உற்சாகத்துடனேயே இருப்பார்கள்

கப்பல் வரும்போது தங்களுக்குப் போதிய வருமானம் கிடைப்பதற்கான வேலை கிடைத்து விட்டதே என்று மகிழ்ச்சியில் ஏற்பட்ட உற்சாகம் தான் அது:

### ✱கப்பல்கள் வந்தன

ஒரு நாள் திடீரென்று கோகோ துறைமுகத்துக்கு நான்கு கப்பல்கள் ஒரே நாளில் வந்து சேர்ந்தன

அன்று அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவே இல்லாமல் போய் விட்டது

### 120டொலர் வாடகை

இதைவிட மற்றொரு அதிசயம் அங்கு நடந்தது. சண்டே நாதா என்பது அந்த விவசாயின் பெயர். அவரதுவீட்டின் பின் புறத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பீப்பாய்களைச் சேமித்து வைக்க ஒருவர் அனுமதி கேட்டார். அதற்கு வாடகையாக மாதம் 120 அமெரிக்க டொலர்கள் அவருக்குத் தரப்படும் என்றும் கூறப்பட்டது. வாயடைத்துப் போனார் நாதா. மறு வார்த்தை பேசாமல் அந்த நேரத்துக்கு ஒப்புக்கொண்டார். தமது வீட்டின் பின் பகுதியை யாருக்கோ வாடகைக்கு விட அவர் இணங்கினார்.

ஆனால் இத்தனை ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவந்த அந்தச் சம்பவத்தின் பின்னணியில் ஒரு பயங்கரம் மறைந்து கொண்டிருந்ததை நாதாவோ, அந்தப் பகுதி மக்களோ அறிந்திருக்கவில்லை.

அந்தக் கப்பல்களில் மனித வளத்தையோ அல்லது தேசவளத்தையோ வளர்க்கக் கூடிய பொருள் எதுவுமே வரவில்லை.

இரண்டையுமே அழித்து விடக்கூடிய அதி பயங்கரமான பொருளே அந்த நான்கு கப்பல்களிலும் வந்திருந்தன.

கோகோ கிராமத்தை மாத்திரமல்லாமல் முழு நைஜீரியாவுக்கும் அதனைச் சார்ந்த ஆபிரிக்கக் கண்டத்துக்கும் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியபொருள்கள் அவற்றில் வந்து சேர்ந்தன.

இயற்கைக்கும், மனித உயிர்கள் உட்பட சகல உயிரினங்களுக்கும் அழிவையும், பயங்கர விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடிய ரேடியோ கதிர்வீச்சுத்தன்மை கொண்ட திரவமும், நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன வகைகளுமே அந்த டிரம்களில் இருந்தன.

அவற்றில் இருந்த இரசாயனப் பொருள்களில் பல உலகிலுள்ள அதி பயங்கரம் வாய்ந்த பத்து இரசாயனப் பொருள்கள் என ஐக்கிய அமெரிக்கச் சுற்றாடல் பாதுகாப்பு ஏஜென்ஸியும் ஐக்கிய குடியரசு-ஜப்பானியா அணுசக்தி ஏஜென்ஸியும் எச்சரிக்கை செய்தன.

### பயங்கரம் வெளியானது

இத்தனை பயங்கரம் வாய்ந்த பொருள்கள் நைஜீரியாவுக்குள் வந்து எவருக்கும் தெரியாமல் ஒரு சூன்யமான பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரகசியத்தை ஒரு நைஜீரியப் பத்திரிகையாளரே கண்டு பிடித்தார்.

அதனை அடுத்து அந்தப் பயங்கர இரகசியம் அம்பலமாகியது.

நைஜீரிய அரசாங்கம் விழித்துக் கொண்டது.

அந்தப் பொருள்களின் பயங்கர விளைவுகள் பற்றி ஆராயவும், அவற்றைப் பாதுகாப்பாக வேறு இடத்துக்கு எடுத்துச் சென்று அழித்து விடுவதற்கான வழிவகைகளை ஆராயவும் அது அணுசக்தித் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த வெளிநாட்டு ஏஜென்ஸிகளின் உதவியை நாடியது.

இது இவ்வாறிருக்க நான்கு கப்பல்களும் தங்கள் பகுதிக்கு வந்த மகிழ்ச்சியில் அந்தப் பகுதி மக்கள் துள்ளிக் குதித்தனர்.

### இரண்டு டொலர் கூலி

அந்தக் கப்பல்களிலிருந்து குறிப்பிட்ட பீப்பாய்களை இறக்குவதற்காக சுமார் 300 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு இரண்டு அமெரிக்க டொலர்கள் கூலியாக வழங்கப்பட்டன.

ஒரு சில பீப்பாய்கள் கப்பலுக்குள்ளேயே உடைந்திருந்தன. அவற்றிலிருந்து இரசாயனப் பொருள்கள் கசிந்த வண்ணமிருந்தன, அத்துடன் அவற்றிலிருந்து ஒரு விதமான மணமும் வெளிவந்து கொண்டிருந்தது.

வேலைக்கு அமர்த்தப்பட்ட அனைவருக்கும் தோல் கையுறைகளும், ரப்பர் கையுறைகளும் அணிந்து கொள்வதற்காக வழங்கப்பட்டன.

பீப்பாய்களிலிருந்து கசிந்து போன இரசாயன வகைகள் இந்தக் கையுறைகளில் பட்டபோதெல்லாம் அவை மாயமாய் மறைந்து போயின அல்லது அழிந்து போயின.

அப்போது கூட அந்தப் பொருள்களின் பயங்கரம் ஒருவருக்குமே தெரியவில்லை.

நைஜீரிய அரசாங்கத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு அந்தப் பொருள்கள் வேறு பெயரில் கொண்டுவரப்பட்டிருந்த விபரத்தையும் ஒருவரும் அறிந்திருக்கவில்லை.

### மரணப் பொதிகள்

''இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்ட மரணப் பொதிகள்'' என்று நைஜீரியப் பத்திரிகைகள் இதற்குப் பெயரிட்டன.

பொரிகுளோரேபைபெனில்ஸ், புளுரோஸிலிக் கேட்ஸ் சயனேட்ஸ், மீதைல் மெலாமைகள், டைஒக்ஸின் போன்ற நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களும் மற்றும் இரசாயனக் கழிவுப் பொருட்களும் அந்தப் பீப்பாய்களில் இருந்தன.

நைஜீரிய சுங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றும் சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கும் அன்பளிப்புகள் வழங்கியும், போலியான பத்திரங்களைத் தயாரித்தும் இந்த 3,884 தொன் நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனக் கழிவுப் பொருள்கள் நைஜீரியாவுக்குள் கொண்டுவரப்பட்டன.

ஏற்கனவே போட்ட திட்டத்தின்படி 54 ஆயிரம் தொன் நச்சுப் பொருள்கள் இவ்விதமாக கொண்டு வரப்பட இருந்தன. ஆனால் ரகசியம் வெளிப்படவே இதற்குப் பின்னணியாக இருந்த இத்தாலிய வர்த்தகரான ஜியான் பிராங்கோ ரப்பெல்லி நைஜீரியாவை விட்டே தலைமறைவாகி விட்டார்.

கோகோவுக்கு 180 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் அஸாபா என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் ஒரு தொழிற்சாலையில் பயன் [illegible] கொண்டு வரப்பட்டதே [illegible] பொருள்கள் என்ற இறக்குமதியாளர் கோகோ மக்களிடம் கூறினர்.

அவர்களும் அதை நம்பினர். விளைவு அதியங்கரமான இரசாயன கழிவுப் பொருள்கள் நைஜீரிய நாட்டுக்குள் புகுந்து கொண்டன.

### கடுமையான மோதல்

நைஜீரிய அரசாங்கம் இத்தாலிய அரசாங்கத்துடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டன.

கோகோ மக்களை விவசாயத்தில் ஈடுபடவேண்டாம் என்று நைஜீரிய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. விவசாய உற்பத்திப் பொருள்கள் மூலம் பயங்கரமான நச்சுப் பொருள்கள் மனித உடலுக்குட்செல்வதைத் தடுப்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே இந்தக் கழிவுப் பொருள்களை ஆபத்தின்றிப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச்சென்று அவற்றை அழித்துவிடுவதற்கான ஆலோசனைகள் வெளிநாட்டு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த நஞ்சுப் பொருள்களை மீண்டும் இத்தாலிக்கே திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டன,

இதேவேளையில் அவற்றை மீண்டும் கப்பலில் அனுப்புவதற்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள்தங்கள்பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் எனவும் பாதுகாப்புக்குத் தேவையான உடைகள், சுவாசக்கருவிகள் போன்றவைவழங்கப்படவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தன.

அத்துடன் இலவச மருத்துவவசதிகள், காப்புறுதித்திட்டம் போன்றவற்றைஏற்கனவேஅந்தப்பொருட்களைக்கப்பலிலிருந்து இறக்கிய கோகோ வாசிகளுக்கு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

இத்தனை அபாயத்துக்கும், சிக்கலுக்கும், பிரச்சினைக்குமிடையில் அந்தப்பயங்கர நச்சுப் பொருள்களைஎப்படியோ பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன;

இந்தச் சம்பவத்திற்குப்பிறகு நைஜீரிய அரசாங்கம் அதன் கரத்தை வலுப்படுத்திக்கொண்டது,

இப்படியாக நச்சுக்கழிவுப்பொருள்களை நாட்டுக்குள் கொண்டுவந்து உயிருக்கும், உடைமைக்கும், நாட்டுக்கும் பயங்கர ஆபத்தை விளைவிப்பவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு நைஜீரிய அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.

(ஐ)

நன்றி: பரேனஸ்
தமிழில்: பெ. இ.


✱ எமது நேற்றைய புதிய வெளியீடு

உஷா சினிமா

அர்ஜுன், ரூபினி, ஸ்ரீவித்யா
S. S. சந்திரன், கவுண்டமணி
நடித்த

தாய்ப்பாசம்

[ஒரிஜினல் பிரதி]

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[8678]



வாகனங்களுக்கான

தகுதிச் சான்றிதழ் வழங்கல்

FITNESS CERTIFICATES FOR MOTOR VEHICLES

1989 ஆம் ஆண்டுக்கான வாகன லைசென்ஸ் பெறுவதற்குத் தேவையான வாகனப் பரிசோதனையும், சான்றிதழ் வழங்குதலும் எமது கீழ்க்கண்ட புதிய முகவரியில் நடைபெறுகின்றன என்பதை வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கின்றோம்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

10, குரேசெற் ஒழுங்கை, (கச்சேரி - நல்லூர் வீதி)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(கச்சேரியிலிருந்து 200 யார்) (C/1289)


# யாழ்மாவட்டநெற்செய்கையில் 30 சதவீதவீழ்ச்சி

## மழை வீழ்ச்சி குறைவே காரணம்

யாழ்ப்பாணம், ஜன: 12

யாழ் மாவட்டத்தின் 88ஆம் 89ஆம் ஆண்டுக்கான நெல் உற்பத்தி 30 சதவீதத்தால் வீழ்ச்சி அடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

குறைவான மழை வீழ்ச்சியே உற்பத்திக் குறைவுக்குக் காரணமாகும்.

88ஆம் 89ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்தம் 11 ஆயிரத்து 930 ஹெக்டெயார் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதிலிருந்து மொத்தம் 16 ஆயிரத்து 680 மெட்ரிக்தொன் நெல் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் மொத்தம் 11 ஆயிரத்து 256 ஹெக்டெயார் நிலத்தில் மாத்திரமேநெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மழைவீழ்ச்சி குறைவாக இருந்த காரணத்தால் இதிலிருந்துமொத்தம் 11 ஆயிரத்து 215 மெட்ரிக் தொன் மாத்திரமே உற்பத்தியாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கைதடி, உடுவில், அம்பன், வேலணை போன்ற பகுதிகளிலேயே இந்த முறை உற்பத்தி வெகுவாகப்பாதிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழமையாக ஆயிரம் மில்லிமீட்டர்மழைவரை பெய்யும்.

நல்லதொரு நெல் விளைச்சலுக்கு இந்த மழைபோதுமானது.

ஆனால் கடந்த வருடம் சம்பந்தப்பட்ட மூன்று மாதங்களிலும் மொத்தம்568.1 மில்லிமீட்டர் மழை மாத்திரமே பெய்திருக்கிறது.

(ஐ-10)

## வீதியில் உள்ள கிடங்கினால் மாணவர் அவதி

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ் மத்திய கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் அருகில் முதலாம்குறுக்குத் தெருவில் உள்ள கிடங்கினால் நாளாந்தம் பல விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன,

இரண்டு பாடசாலைகளையும் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இந்தப் பகுதியால் பாடசாலை சென்று வருவதால் பல சிரமங்களை அவர்கள் எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது. (இ-5)

## நூல் நிலையம்

சுழிபுரம், ஜன. 12

வலிகாமம் மேற்குப் பிரதேசசபை சுழிபுரம் உபஅலுவலகம்நடத்தும் நூல்நிலையம் வழக்கம் பறை அம்மன் கோவிலுக்குச் சமீபமாக அமைந்துள்ள பலநோக்குச்சங்கப் பண்ணைகம் இனைக் கட்டடத்தில் இயங்க ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளது.

பிரதேசசபை நூல்நிலைய நிரந்தரக் கட்டடத்தில் இந்திய அமைதிப்படையினர் தங்கியுள்ளதால் சென்ற ஆண்டு நூல்நிலைய வாசிகசாலை மட்டும் சபையின்அலுவலகத்தில் இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது. (க-28)

## சனசமூக நிலையப் பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் மாவட்ட ரீதியில் சனசமூக நிலையங்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிஒன்றை நடத்த உள்ளது.

மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் பெப்ரவரி 19ஆம் திகதி யாழ் வேம்படி மகளிர்கல்லூரியில் நடத்தப்படும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பமுடிவுத்திகதி இம்மாதம் 31 ஆகும்.

போட்டி விவரங்களை மேற்படி ஒன்றியத்திலிருந்து அறியலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## வாசகர் திருமுகம்

### வைத்திய அதிகாரி இல்லாத குறை நீங்குமா?

கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சில மாதகாலமாக மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி இல்லாத நிலைமையில் பணிமனை இயங்கி வருகின்றது.

இதனால் பல கிராமங்களில் வேலை செய்யும் சுகாதார உதவியாளர்கள் வேலைக்கு வருவதே இல்லை.

தொற்று நோய்த் தடுப்பு வேலை செய்யப்படாமல் கிராமங்களில் நோய்கள் பரவுகின்றன. இத்தகைய பெரிய மாவட்டத்துக்கு ஒரு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியை நியமிக்காதது கிளிநொச்சி மாவட்ட மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது பற்றி பலமுறை அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

உடனடியாக இம்மாவட்டத்திற்கு ஓர் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

க. சந்திரா.
கிளிநொச்சி.

### வில்லூன்றி மயானம் அவல நிலை

யாழ். வில்லூன்றி மயானம் யாழ் நகரத்தை அண்டி வாழும் சைவசமய மக்களின் பொது மயானமாக இருந்து வருகின்றது. யாழ் மாநகர சபையின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் இந்த மயானத்தில் காவல்காரர் ஒருவரும் பணியாற்றுகின்றார். அத்துடன் மயானத்தின் நாற்புறமும் உயர்ந்த மதிலும் கிழக்கு மேற்குப் பக்கங்களில் கேற்றுகளும் உள்ளன.

இத்தகைய வசதிகள் இருந்தும் மயானம் எங்கும் மலம் கழிக்கப்பட்டு கால் வைக்கவே இடம் இல்லாமல் நாற்றமாக உள்ளது.

இறுதிக் கிரியைகள் நடைபெறும்போது மூக்கைப் பிடித்துக்கொண்டு நிற்க வேண்டி உள்ளது.

புனிதமான இடமாகப் பராமரிக்கப்பட வேண்டிய சுடலை மிகவும் அருவருக்கத்தக்க நிலையில் இருப்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

எனவே யாழ் மாநகர சபையும் பொது ஸ்தாபனங்களும் பொது மக்களும் கவனம் எடுத்து கோம்பயன் மணல் சுடலை போன்று இதனைச் சோலை ஆக்க வேண்டும்.

குறைந்த பட்சம் மலம் கழிப்பதையாவது நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

—நா கோபாலகிருஷ்ணன்
யாழ்ப்பாணம்.


COMMERCIAL ACADEMY

1st Lane, Power House Road, Jaffna.

ENGLISH CLASS
BY
S. BALARAJAH

(Specially for those who got (A/L) Results.)

Start on: 14. 1. 89 3. p. m.

(C/1291)



NEW MASTER INSTITUTE

241, Navalar Road, Jaffna. B. M. C Lane, Jaffna.

89 A/L PAPERCLASSES

பிரிவு - I [Saturday & Sunday]

ஆரம்பம் 15- 01- 1989
Sunday 8. 30 a. m

8.30 - 9.30 — Chemistry — திரு தில்லைநாதன்
9.30 - 10.30 — Physics — திரு வர்ணம்
10.30 - 11.30 — Zoology — திரு. நாகநாதன்
11.30 - 12.30 — Botany — திரு. குகாதரன்

(C-1262)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்தின் விலை அதிகரிப்பால் கட்டட வேலைகள் இடைநிறுத்தம்

ஊர்காவற்றுறை ஜன 12

ஊர்காவற்றுறை புளியங்கூடல், நாரந்தனைப் பகுதிகளில் கட்டப்பட்டு வந்த வீடுகள் சிமெந்தின் விலை அதிகரிப்பால் இடைநிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

இங்கு சிமெந்து 130 ரூபா தொடக்கம் 140 ரூபா வரை விற்கப்படுகிறது.

இப்பகுதிகளில் சில அரசாங்கப் பாடசாலைகளில் மேற்கொள்ளப் பட்டு வந்த புதிய வகுப்பறைக் கட்டட நிர்மாண வேலைகளும் இக்காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ச-16)

## பௌத்த காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு ஜன 12

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்படும் 29 எம் பி பதவிகளில் ஒன்பது பதவிகள் பௌத்த மதத்தினருக்கு ஒதுக்கப் பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இந்தக் கோரிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளது.

## வெளிநாட்டில் சிகிச்சை; அரசின் புதிய திட்டம்

உயிர்காக்கும் அவசர சத்திர சிகிச்சைகளை வெளிநாடுகளில் மேற்கொள்ளவேண்டியவர்களுக்கு உதவ அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கக் கூடியதாக இத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

இந்த நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினராக வருவதன் மூலம் இந்த உதவியைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

இப்போது இந்த ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் சுமார் 5 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.


வல்வெட்டித்துறை நகரசபை.

## கேள்வி விளம்பரம்

1988. 12. 22ந் திகதிய உதயன் தினசரியில் பிரசுரிக்கப்பட்ட மின் பொருட்கள், காகிதாதிகள் ஆகியன வழங்கல் சம்பந்தமான விளம்பரம் தொடர்பானது.

குறித்த விளம்பரத்தில் குறிப்பிடப் பட்ட சகல விடயங்களுக்கானதும், வண்டி, வாகன. மிருக வரித் தகடுகள் விநியோகத்திற்குரிய கேள்விகள் கோருவதற்குமான படிவ விநியோக இறுதித்தினம் 1989 01.24ந் திகதி நண்பகல் 12.00 மணிவரையும், கேள்விகள் மீளப்பெறும் இறுதித் தினம் 1989 01 31ந் திகதி பிற்பகல் 3.00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் கடமை நேரத்தில் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

வ. இராமச்சந்திரன்,
செயலாளர்,
நகர சபை,
வல்வெட்டித்துறை.

1989- 01- 03. (C/1286)



# BOOK KEEPERS

அடிப்படைக் கல்வி எதுவுமின்றி, யாழ். நகரில் இருந்து கொண்டே செலவும் சிரமமுமின்றி LONDON பரீட்சைகளில் சித்தியெய்தி கணக்கியல் பட்டதாரியாகவும், வெளிநாடுகளில் வருவாய் மிக்க தொழில் வாய்ப்புக்களை விரைவாகப் பெறவும்—

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

Pitmans Book - Keeping

PRELIM
INTER
ADVANCE

ஆரம்பம்:- 18-01-1989

உங்களுக்கோர் வளமுள்ள எதிர்காலத்தை உருவாக்க எங்களை ஆலோசியுங்கள்!

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Accountancy Studies

16, 3 ஆம் குறுக்கு வீதி,
[O L R. தேவாலய மேற்குப்பக்கம்]
யாழ்ப்பாணம்.

[C/1281]



\+
J M J

உங்கள் பயண அமைப்பாளர்

# S. P. ANTON

மகிழ்ச்சியுடன் வழங்கும்
நற் செய்தி

## யோர்தான்

யோர்தான் நாட்டில் பண்ணைத் தொழிலாளர்களாகவும் உதவியாளர்களாகவும்
FARM WORKERS AND GENERAL HELPERS
பணியாற்றுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வளமிக்க யோர்தான் நாட்டில் சிறந்த சம்பளத்துடன் பணிபுரிய

**அரியதோர் சந்தர்ப்பம் இது!**

முதற்குழுவில் இருபது பேர் அடுத்த இருவாரங்களுக்கிடையில் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

சம்பளம்:
600- 800 அமெரிக்க டொலர்கள்

**இரண்டு வருட ஒப்பந்தம்**

அமெரிக்க நிர்வாகிகளின் தலைமையில் இயங்கும் ஸ்தாபனம்.

மற்றும்

சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# எஸ். பி. அன்ரன்

No. 648, 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C/1266)


விண்ணக வாழ்வின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சோதிமலர் ஜெயக்குமார்

மலர்வு: 06-01-1968 உதிர்வு! 13-12-1988

சோதி மலரெனும் சோதி—எம்
நெஞ்சில் சுடர்விடும் சோதி
ஓதி உணர்த்திடும் கல்வி - சிறுவர்க்கு
ஊட்டி மகிழ்ந்திடும் செல்வி
நீதி விதி என்று சொல்லி எம்மை
தீரா துயரினில் தள்ளி
ஆதி முதல்வனின் நீதி — துயர்
அழித்து அணைப்பதோ நீதி

எல்லையில்லா ஒளி வெள்ளம் - இந்த
இயற்கை போல் இறைவனின் உள்ளம்
சொல்லி வைத்தேன் உந்தன் பெயரில்-இன்று
தோய்ந்து கலங்குகின்றேன் துயரில்
வெல்லுதல் உண்டெனில் மீண்டும் - நீ
மீளவென் குலத்தினில் வேண்டும்
வல்லமை மாந்தர்க்கு இல்லை - அதன்
மறுபக்கம் இறைவனே எல்லை

எம் இதயத்தில் ஒளிவிடும் சோதிமலரை இழந்து துயருறும்:

கணவன், தந்தை, தாய்,
சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.

''அன்பு இல்லம்''
இல 2, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம் (8665)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. கதிர்காமு ஆறுமுகம்

[அமுதினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]
தெல்லிப்பளை

பிறப்பு: 31 - 5 - 1934 மறைவு: 13 - 12 - 1988

அன்னையை இழந்து தவித்த பொழுதும்
உன முகத்து ஒளியினிலே மகிழ்ந்திருந்த
சுல கலப்பு வாழ்க்கை எல்லாம்
கனவாகுதைய்யா
ஊரறிந்த கல்வி உரம் பெறவைத்து
உயர்த்தி வைத்தாயைய்யா
ஆலமரமாய் அனைவரிற்கும் வழிகாட்டியாய்
அன்பு வழி காட்டினுயைய்யா
இடைநடுவில் எங்களைக் கண்ணீர்க் கடலில்
ஆழ்த்தி விட்டு
இறைவனோடு இறைவனாய் இணைந்து
விட்டீரோ!

அப்பா உங்கள் ஆத்மா சந்தியடைய
தினம் தினம் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி
செலுத்துகின்றோம்.

12-1-89 இன்று வியாழக்கிழமை அன்னாரின் வதிரி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளின் போது உற்ருர், உறவினர், நண்பர்களை வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்

'வதிரி',
கரவெட்டி. (8634)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிற்றம்பலம் செல்லத்துரை

(ஈஸ்வரி ஸ்ரோர்ஸ்)

மலர்வு: 17 - 10 - 1917 உதிர்வு: 16 - 12 - 1985

திதி: 12—1—1989

எங்கள் வாழ்வுக்காக அயராது உழைத்து எம்மை அன்போடும், பண்போடும் வளர்த்தும், ஆதரித்தும் வழிகாட்டிய எமது அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அருமை மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்,
நண்பர்கள்.

செ. இலட்சுமணன்,
இல 90, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(C-1280)

## 2 வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சரவணமுத்து சதானந்தன்

(மாணவன் அரசினர் கலவன் பாடசாலை)
கைதடி நுணுவில்

மலர்வு: 13 03-1970 உதிர்வு: 04-01-1987

ஈராண்டு போனபின்னும் நினைவலைகள்
மாறவில்லை
இதயத்தில் நிறைந்தவனே இனிமையாய்
வாழ்ந்தவனே!
எம் இதயங்களிலெல்லாம் மலராக
மணந்தவனே!
அன்புள்ளம் கொண்டவனே இன்னமுமா
தூங்குகின்ருய்?
நம்பவே முடியவில்லை மனதாலே
வாடுகின்ரோம்
மகனே! உன் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்ரோம்
நீங்காத நினைவானுய் பூதவுடல்
அழிந்தாலும்
எம் இதயங்களில் அணையாத சுடராளுய் [illegible]
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரி,
பவான் ஆனந் (பிரான்ஸ்), சாந்தி.

[illegible]
மட்டுவில் தெற்கு,
[illegible]

(8648)

## 41 ஆம் நாள் நினைவாஞ்சலி



பிறப்பு: 1964-2-2 இறப்பு: 1988-12-3

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், சிரிப்பில் நிறைமதியாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் மகிழ்வோடு வாழ்ந்து இடைநடுவில் எம்மை ஆருத்துயரத்தில் ஆழ்த்திவிட்ட கன்ற எங்கள் அன்புத் தெய்வமே.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

தாய், சகோதரர்கள்,
மாமன், மாமி

143/1, ஆஸ்பத்திரி ரோட்,
யாழ்ப்பாணம். (8671)

## 31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்!

தோற்றம்: 12 03-1920

மறைவு: 12-12-1ዓ88



### இறப்பியேல் இம்மானுவேல்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்பின் திருவுருவாய். பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பிள்ளைகளுக்கு நல் வாழ்வினை அளிக்க, அனுதினமும் ஆண்டவனை பக்தியுடன் வேண்டி நின்ற, எம்மை ஆளாக்கிப் பேராக்கிய எமது அன்புத் தெய்வமே, எம்மை விட்டு நீங்கள் பிரிந்து சென்ருலும், எங்கள் உயிரிலும், உடலிலும் கலந்துவிட்ட நீங்கள் என்றும் எங்களுடன் வாழ்கின்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

161/1 சுடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம் (8815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

**குறள்:**
கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

**பொருள்:**
அறிவில்லாதவர் தாம் கல்லாத நூல்களையும் கற்றவர் போல மேற்கொண்டு நடத்தல், அவர் குற்றமறக் கற்றுவல்ல பொருளைப் பற்றியும் ஐயம் உண்டாக்கும்.

உதயன்
இன்மை - இருளகற்றும் - ஓர் சுடரொளி

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
12. 1. 1989 த. பெ. இல 23

# மாணவருக்குப் பகலுணவு

புதிய ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாசாவின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களில் இரண்டாவதாக அமைவது பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவதாகும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாடும் எழுபது இலட்சம் குடும்பங்களுக்கு இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் 2,500 ரூபா நிவாரணம் வழங்கி அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது ஜனாதிபதியின் முதலாவது திட்டமாகும்.

நலிந்த மக்கள் நலன் நாடி செயற்படுத்தப்பட இருக்கும் இந்த இரு திட்டங்கள் பற்றியும் ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை மாகாண முதலமைச்சர்கள், மாகாணச் செயலாளர்கள், மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு விவரமாக விளக்கினார்.

இந்த இரு திட்டங்களையும் செயற்படுத்துவதற்குப் பெரும் பணம் செலவாகும் என்பது வெள்ளிடை மலை. அவற்றுக்குத் தேவையான நிதியை ஜனாதிபதி எவ்வாறு கண்டு பிடிக்கப் போகிறார் என்ற கேள்வியை பொருளியல் நிபுணர்கள் மட்டுமன்றி சாதாரண பிரஜைகளுமே எழுப்புகிறார்கள்.

ஜனாதிபதியே நிதி அமைச்சர் பொறுப்பை வைத்திருப்பதால், தொடர்ந்து வைத்திருப்பார் என்பதால், ஏனைய செலவினங்களை வெட்டியும் புதிய வருமான வழிகளை உருவாக்கியும் அவர் இந்த இரண்டு சமூகநலத் திட்டங்களையும் நிறைவேற்றியே தீருவார் என நம்பலாம்.

இரண்டு திட்டங்களும் பொதுத் தேர்தல் முடிந்து, நாடாளுமன்றம் கூடி, வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் சிங்கள-தமிழ் புத்தாண்டோடு அமுலுக்கு வரும் என்பதையும் திரு. பிரேமதாசா செவ்வாயன்று நடந்த மாநாட்டில் கோடிட்டுக் காட்டினார்.

பொதுவாக ஆராயப்போனால், ஜனாதிபதியின் இரண்டு திட்டங்களும் தடங்கலின்றி, தங்குதடையின்றி செயல்வடிவம் பெறுமானால், நாட்டின் இலட்சோபலட்சம் வசதி குறைந்த, பொருளாதாரத்தில் சமூகத்தின் அடி மட்டத்தில் உள்ள மக்கள் பெரும் பயன் அடைவார்கள். அவர்களது வாழ்க்கையில் விடிவு ஏற்படும்.

பாடசாலை மாணவருக்கான பகல் உணவுத் திட்டம் சத்துணவு விநியோகமாக நடக்கும் பட்சத்தில் போசாக்கின்மையால் அவதிப்படும் இந்த நாட்டின் லட்சக்கணக்கான எதிர்காலப் பிரசைகள் நன்மை அடைவார்கள்.

நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களில் பெரும்பான்மையானவர்கள் போசாக்கின்மையால் ஆரோக்கியம் குன்றிய, மன வளர்ச்சி குன்றிய, நோய்களுக்கு இலகுவில் ஆளாகும் இயல்புடையவர்களாக மாறி இருப்பதை சமூக நலனில் அக்கறைகொண்ட பலரும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

காலையில் உணவு எதுவும் அருந்தாமலே பாடசாலை போகும் சிறார்களும், சாப்பாடு இல்லை என்பதால் பாடசாலை செல்லாத சிறார்களும் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடுவதற்கு இல்லை.

ஆகவே, ஜனாதிபதியின் பகல் உணவுத் திட்டம், சத்துணவு விநியோகமாகவும் அமையும்போது வசதி குறைந்த சிறார்களைப் பொறுத்தமட்டில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களைப் பறிப்பதற்கு ஒப்பாகும்.

இதற்கு முன்னரும் இலவச பகலுணவுத் திட்டம் நாட்டில் அமுலில் இருந்ததை மறந்துவிடுவதற்கில்லை. தாங்கள் மாணவராக இருந்து பணிஸும் பாலும் அருந்தியதை இப்போது நடுத்தர வயதில் உள்ள பலரும் நினைவு கூருவார்கள்.

புதிய பாடசாலை பகலுணவுத் திட்டம் பணிஸும் பாலும்தான் என்ற நிலை இல்லாமல், அந்தந்தப் பகுதிகளில் தாராளமாகக் கிடைக்கும் சத்துணவுகளை வழங்குவதாக அமைவதே சிறப்பு.

அதன் மூலம் அந்தந்தப் பகுதியில் உணவு உற்பத்தித் துறையும் வளர்ச்சி காணும். பலருக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படவும் வசதி உண்டாகும்.

மொத்தத்தில் பகலுணவுத் திட்டம் பன்முகப்பட்ட பெறுபேறுகளை நல்கி நாட்டுக்கு நன்மை பயக்கும். இடை நடுவில் நிற்காத ஒரு தொடர் திட்டமாகவும், நிரந்தர சமூகநலத் திட்டமாகவும் அமைய வழியுண்டாகும்.

# ஹங்கேரியில் இருந்தும் சோவியத் படை விலகல்

புடாபெஸ்ட், ஜன. 11

ஹங்கேரியில் இருந்து சோவியத் துருப்புகளின் ஒருபகுதி விரைவில் வெளியேறும் என்று அறிவிக்கப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து 5லட்சம் சோவியத் துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படும் என சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் அறிவித்திருந்தார்.

அதற்கிணங்கவே ஹங்கேரியில் இருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேற ஆரம்பித்திருக்கிறது.

1956 புரட்சியை அடக்க ஹங்கேரிக்குள் சோவியத் துருப்புக்கள் பிரவேசித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## தேர்தல் ஏப்ரலில்?

புதுடில்லி, ஜன 11

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் நடக்கும்.

அரசின் உள்வட்டாரங்கள் மூலம் தான் இதை அறிந்துகொண்டதாக ஜனதா தள் தலைவர் வி. பி சிங் தெரிவித்தார்.

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் திரு. சிங் தெரிவித்தார்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் வருகிற டிசம்பருடன் முடிவடைகின்றது. (எ)

## கண்டனம்

லண்டன், ஜன. 11

சோமாலியாவில் அரசுப்படைகள் குடிமக்களை வகை தொகை இன்றி கொலை செய்து வருவதைப் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிவ்ரிஹோ கண்டித்தார். (எ)

# புஷ், எடின்பரோ கோமகன் ஜப்பான் செல்வர்!

வாஷிங்டன், ஜன. 11

மறைந்த ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள அமெரிக்காவின் புதிய அதிபர் ஜோர்ஜ் புஷ் செல்வார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் மகாராணியின் சார்பில் அவரின் கணவர் எடின்பரோ கோமகன் செல்வார் என ஏற்கனவே பக்கிங்ஹாம் மாளிகை அறிவித்து விட்டது.

அதிபர் புஷ் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயமாக ஜப்பான் பயணம் அமையலாம் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது மறைந்த ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோதான் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் மீது போர்ப் பிரகடனம் செய்தார்.

அமெரிக்கா நடத்திய அணுக்குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்தே, ஜப்பான் அமெரிக்காவிடம் சரணடைந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

பசுபிக் கடலில் தவறி வீழ்ந்த

# அமெரிக்க ஏவுகணை தகவல் சாதனம் சோவியத்திடம் அகப்பட்டது

வாஷிங்டன், ஜன 11

பசுபிக் கடலில் வீழ்ந்த அமெரிக்க ஏவுகணை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த முக்கிய தகவல் சாதனம் ஒன்றை சோவியத் யூனியன் கைப்பற்றியிருக்கலாம் என்பது விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக பென்டகன் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் கலிபோர்னியாவில் இருந்து பசுபிக் கடல் மேலாக இந்த ஏவுகணை ஏவப்பட்டது. அதன் மூக்குப் பகுதியில் மிக முக்கியமான தகவல் பதிவுசாதனம் (Flight Recorder) பொருத்தப்பட்டிருந்தது.

அந்த ஏவுகணை திசை தப்பி கடலில் விழுந்துவிட்டது. அதைத் தொடர்ந்து, ஏவுகணையில் பொருத்தப்பட்டிருந்த தகவல் பதிவு சாதனத்தைக் கண்டு பிடிக்க அமெரிக்க அதிகாரிகள் இதுவரை எடுத்துவந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அந்தத் தகவல் பதிவு சாதனத்தை சோவியத் உளவு அதிகாரிகள் கைப்பற்றியிருக்கலாம் எனத் தெரிய வந்திருப்பதாக பென்டகன் அறிவித்தது. (எ)

## பல்கேரிய மொழியில் பகவத்கீதை

பல்கேரிய மொழியிலும் பகவத்கீதை மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

பல்கேரிய மொழியில் நல்ல பாண்டித்தியம் உள்ள இந்து சரித்திரவியலாளர் ஒருவர் சமஸ்கிருதத்தில் இருந்து நேரடியாக பகவத்கீதையை பல்கேரிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார் என்று நரோத்னு கலாசார வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் செர்ஜி செர்ஜி ரேய்க்கோவ் தெரிவித்தார்.

மொழி பெயர்ப்பு நூலில் பகவத்கீதை பற்றி காந்தி அடிகள், அரவிந்தர், லோகமான்ய திலகர் ஆகியோர் தெரிவித்த விளக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. (எ)

ஜெனிவா உடன்பாட்டின்படி

## ஆப்கானிலிருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேறுமா?

வாஷிங்டன் ஜன 11

ஜெனிவா உடன்பாட்டை மதித்து ஆப்கனில் இருந்து வருகிற மாதம் 15ஆம் திகதிக்குள் சோவியத் துருப்புக்கள் வெளியேறிவிடும் என்று அமெரிக்க அதிபர் றேகன் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

திட்டமிட்டபடி பெப்ரவரி 15க்குள் சோவியத் துருப்புக்கள் வெளியேறுவது முடியாத காரியமாக இருக்கும் என்று மாஸ்கோவில் பிரதி வெளியுறவு அமைச்சர் யூலி வொரன்ஷோவ் தெரிவித்தார்.

அது பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அதிபர் றேகன் இப்படித் தெரிவித்தார்.

கிளர்ச்சிக்காரர்கள் தாக்குதல் தொடருமானால் சோவியத் துருப்புக்கள் வெளியேற்றம் நடைபெறும் என்பது மாஸ்கோ அரசின் நிலைப்பாடு.

சோவியத் துருப்புக்கள் வெளியேறிய பின்னர், டாக்டர் நஜிப்பின் அரசு கெரில்லாக்களின் தாக்குதலுக்கு நின்று பிடிக்க முடியாது என்பது அமெரிக்காவின் நிலைப்பாடு.

துருப்புக்கள் வெளியேறுவதற்கு முன்னர் எப்படியாவது டாக்டர் நஜிப் அரசுப் பிரதிநிதிகளையும் சேர்த்து கெரில்லாக்களின் ஆதரவுடன் கூட்டரசு ஒன்றை அமைக்கவேண்டும் என சோவியத் அரசு முயற்சித்து வந்தது. அது தோல்வியில் முடிந்தது தெரிந்ததே.

ஜெனிவா உடன்பாட்டின் படி பெப்ரவரி 15இற்கு முன்னர் சோவியத் துருப்புக்கள் வெளியேறு விட்டால், மாஸ்கோ அரசுக்கு உள்நாட்டில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும் என்றும் வெளிநாடுகளில் மாஸ்கோ அரசின் செல்வாக்குப் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சீனு - 132 கோடி!

இந்த நூற்றாண்டின் முடிவில் சீனாவின் சனத்தொகை 132 கோடியாகி விடப்போகிறது.

இது சீன அரசு திட்டமிட்டுள்ள சனத்தொகை இலக்கிலும் பார்க்க 12கோடி அதிகம் என்று பீகிங் 'இகனமிக் டெய்லி' நாளிதழ் செய்தி வெளியிட்டது.

சீன அரசு புதிய நிலைமை குறித்து மக்களை எச்சரித்துள்ளது. 'ஒரு குழந்தை' கொள்கையை ஒவ்வொரு குடும்பமும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சீன அரசு கோரிக்கை விடுத்திருக்கிறது.

மக்கள் விழிப்புணர்வு பெற்று நாட்டில் துக்ககரமான நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அரசு வேண்டுகோள் கோரியுள்ளது.

பீகிங் தகவலின்படி, 'ஒரு குடும்பம்' கொள்கைக்கு சீனாவின் கிராமங்களில் ஆதரவு இல்லை என்றும் ஆண் குழந்தைகளை நிறையப் பெறுவதில் கிராமப்புறப் பெற்றோர் ஆர்வம் காட்டி வருவதாகவும், ஆண் குழந்தைகள் செல்வத்தைத் தருபவர்கள் என்ற அபிப்பிராயம் கிராமங்களில் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# அடைமொழி கூறி அழைக்காவிட்டால் அதிர்ந்து போகும் தமிழகத் தலைவர்கள்!

பாண்டிச்சேரி, ஜன 11

தமிழ் நாட்டில் ஒரு தலைவரை குறைந்தது மூன்று அடைமொழிகள் போட்டுத்தான் அழைக்க வேண்டும்; இல்லையேல் அவர் அதிர்ந்து போவாராம். தமிழ் நாட்டில் தான் இக்கேவலத்தைப் பார்க்க முடியும்

மக்கள் சக்தி இயக்க அமைப்பாளரும் பிரபல சிந்தனை எழுத்தாளருமான டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி முன் கண்டவாறு சொன்னார்.

புதுவைப் பல்கலைக் கழகம் தமிழியல் துறை சார்பில் நடத்தப்பட்ட நாமக்கல் கவிஞர் நூற்றாண்டு விழாவில் டாக்டர் உதயமூர்த்தி பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழக மக்களின் துதிபாடும் மனோபாவம் மாறவேண்டும்

அரசியலில் எவரும் சகலகலாவல்லவர்கள் கிடையாது; சினிமாவில் வேண்டுமானால் இருக்கலாம்.

சேர, சோழ, பாண்டிய

## டாக்டர் உதயமூர்த்தி கண்டனம்

யர் பரம்பரையில் வந்தவர்களாக சில தலைவர்கள் தங்களைக் கருதுமாறு நாம் செய்து விடுகின்றோம்

நம்மிடையே நிலவும் பிச்சைக்கார மனோபாவம் மாறவேண்டும் இந்த நாடு எங்கே போய்க்கொண்டு இருக்கிறது. இலவச சோப்பு, சீப்பு என்று எல்லாம் கொடுத்துக் கெடுக்கின்றனர்.

சொந்தக்காலில் நிற்க வேண்டியவர்களின்

தமிழ்நாடு தேர்தல்களம்

காலை உடைத்து கையில் திருவோட்டைக் கொடுத்து அவ்வப்போது கவனித்துக் கொள்கிறேன் என்று அரசே கூறினால் நம்கதி என்னவது?

சேர் சி வி. ராமனுக்குப் பிறகு நமக்கு எத்தனை நோபல் பரிசுகள் கிடைத்துள்ளன?

ஆராய்ச்சிக் கூடங்களிலும் அரசு அலுவலகங்களில் இருப்பது போன்ற நாதிகாவி தேய்க்கும் மனோபாவம் வளர்ந்துவிட்டது.

சுயமாகத் தொழில் செய்து முன்னேறும் துணிச்சல் வராதவரை மீட்சி கிடையாது.

இவ்வாறு டாக்டர் உதயமூர்த்தி சொன்னார். (எ-4)

# என்னிடமா சொல் ஜாலம்? கருணாநிதி கேள்வி

திண்டிவனம், ஜன. 11

மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் என்னிடமா சொல் விளையாட்டுக் காட்டுகிறார்?

திண்டிவனம் வ. உ. சி. திடலில் தி. மு. க தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கலைஞர் மு. கருணாநிதி முன் கண்டவாறு கேட்டார்.

தி. மு. க. தேர்தல் விஞ்ஞாபனத்தை அமைச்சர் சிதம்பரம் கிண்டல் பண்ணிப் பேசியதற்குப் பதிலளித்து திரு. கருணாநிதி சொன்னதாவது;

பெண்கள் சண்டை போடும் போதும் அகப்பையைக் கையில் வைத்துக் கொண்டு அதை அசைத்து அசைத்துச் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒரு பெண்ணிடம் உள்ள அகப்பையில் உழுந்தும் பயறும் இருக்கும்.

இன்னொரு பெண்ணிடம் உள்ள அகப்பை, வெறும் அகப்பையாக இருக்கும்.

வெறும் அகப்பைக்காரி அதை வேகமாக அசைப்பாள்.

[illegible] திரம்பிய அகப்பையை வைத்து இருப்பவள் நிதானமாக, பொறுமையாக ஜாக்கிரதையாக அசைப்பாள். அதைப் போலத் தான் என்னிடம் உள்ள அகப்பை (தேர்தல் விஞ்ஞாபனம்) உழுந்தும் பயறும் உள்ள அகப்பை. அதனால்தான் அதை நிதானமாகக் கையாண்டு இருக்கிறோம்.

எமது விஞ்ஞாபனத்தை ஒரு மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கேலி செய்திருக்கிறார்.

எமது விஞ்ஞாபனம் ஸ்பெஷல் மையால் எழுதப்பட்டது என்றும்,

அறியாமை பொய்மையால் எழுதப்பட்டது என்றும் கூறியிருக்கிறார் அவர்.

என்னிடமா அவர் சொல் விளையாட்டைக் காட்டுகிறார்?

ஆமாம் அது ஸ்பெஷல் மையால் தான் எழுதப்பட்டது.

வாய்மையால், தூய்மையால், நேர்மையால் அது தயாரிக்கப்பட்டது. இது அந்த ஆ... மைக்குத் தெரியாது.

இப்படி திரு. கருணாநிதி பேசினார். (எ)

# தி. மு. க. மேடையில் நடிகை ராதிகா

கோவை, ஜன 11

திடீர் இட்லி, திடீர் சாம்பார் போல தமிழ் நாட்டில் சில திடீர் தலைவர்கள் தோன்றியுள்ளனர். அந்தத் திடீர் தலைவர்கள் நாட்டுக்காக ஒருமுறையாவது சிறை சென்றதுண்டா?

நடிகை எம். ஆர். ராதிகா தி. மு. க. தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கேட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழர் ஒருவர் கோட்டையில் ஆட்சி செலுத்த வேண்டும். அப்போது தான் தமிழர்கள் தலை நிமிர்ந்து நடக்க முடியும்.

தி. மு. க. ஒன்று மட்டுமே உலகெங்கும் வாழும் தமிழரின் இன்னல்போக்க அவர்களின் நலனைப் பாதுகாக்கக் குரல்கொடுக்கும் கட்சி.

[illegible] ராதிகா [illegible] (எ)

# தமிழக அரசியலைக் கலக்கும் 'அசரீரி' விளம்பர யுக்தி

சென்னை ஜனவரி 11

தமிழ்நாடு தேர்தல் மேடைகளில் 'அசரீரி' விளம்பரம் முக்கிய இடம்பெற்று வருகிறது.

ஜெயலலிதாதான், இந்த அசரீரி' விளம்பர யுக்தியை முதலில் ஆரம்பித்துவைத்தார்.

போட்டியாக ஜானகி அணியும் இந்த யுத்தியைக் கையாளத் தயாராகி வருகிறது.

அதென்ன அசரீரி விளம்பரம் என்று எண்ணுகிறீர்களா? புராணங்களில் கடவுள் பேசுவது போல் குரல்மட்டும் கேட்கும். உருவத்தைப் பார்க்க முடியாது. இதற்கு அசரீரி என்று பெயர்.

சில படங்களில் இறந்தவர்கள் பேசுவதாகவும் அசரீரி ஒலிக்கும். டெலிவிஷனில் ஒலிபரப்பாகும் மகாபாரதம், ராமாயணம் தொடர்களில் அசரீரி அடிக்கடி ஒலிப்பதைக் காணலாம்

தேர்தல் மேடையில் அசரீரி விளம்பரத்தை ஜெயலலிதா அறிமுகஞ் செய்துவைத்தார். அதில் எம். ஜி ஆர். பேசுவதுபோல உள்ளது.

ஜெயலலிதாவைப்பற்றி எம் ஜி ஆர். 'ஓகோ' என்று புகழ்வதாக அந்த விளம்பரம் அமைந்துள்ளது.

'எனக்குச் சோதனை ஏற்பட்ட காலகட்டங்களில் மதியூக மந்திரியாக ஆலோசனைகளைத் தந்து நல்லாட்சி நடத்திட வழிகோலினாயே' — என்று எம் ஜி: ஆர். ஜெயலலிதாவிடம் கூறுவதாக அந்த விளம்பரம் அமைந்திருக்கிறது.

'என் அரசியல் வாரிசே; என் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்து! தமிழ்நாட்டினை, தமிழ்ச்சமுதாயத்தைக் காத்திடு! என் வாழ்த்துக்கள் உண்டு' - என்றுகூறி அந்த விளம்பரம் முடிகிறது. மொத்தத்தில் தனது வெற்றிக்கும் நல்லாட்சிக்கும் ஜெயலலிதாதான் காரணம் என்று எம் ஜி ஆர். சர்டிபிக்கட் கொடுப்பதுபோல அந்த விளம்பரம் உள்ளது.

மறைந்த தலைவர் பேசுவதுபோலான இந்த விளம்பரம், மிகப்பெரிய அரசியல் மோசடி என்று ஜானகி அணி கண்டித்திருக்கிறது.

ஜெயலலிதாவின் அசரீரி விளம்பரத்துக்குப் போட்டியாக எங்கள் கட்சியிலும் ஒரு விளம்பரம் தயாராகி வருகிறது இது ஜெயலலிதாவைப்பற்றி எம். ஜி. ஆர். காரசாரமாக விமர்சிப்பதாக உள்ளது.

ஆனால் அவை எம். ஜி ஆரின் உண்மையான வார்த்தைகளாக இருக்கும்'— இப்படி ஜானகி அணியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அசரீரி விளம்பரம் தயார்செய்யும் எண்ணம் உண்டோ? என நெடுஞ்செழியன் அணியிடம் கேட்கப்பட்டது

'எங்களுக்கு எத்தனை வாக்குகள் கிடைக்கும் என்பது தெரியும். இதில் விளம்பரம் கொடுத்து தண்டச்செலவு ஏன்? பகுத்தறிவுப் பாசறையில் பாடம் படித்த நாங்கள் அசரீரியை நம்புவது கிடையாது—என்று அவர் பதிலளித்தார்

தமிழக அரசியல் இப்போது காமராஜ் புராணம், எம் ஜி ஆர் புராணமாகத்தானே இருக்கிறது. ஆகவே 'அசரீரி' விளம்பரங்கள் வருவது பொருத்தமானதுதானே'' - இப்படி அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுரம் * பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, யாழ்நகர்.



# உதயன்

12 · 01 · 1989 வியாழக்கிழமை



சேட்டிங் சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.


பருத்தித்துறை தபாலக கட்டடத்திலிருந்து

## பொலிஸாரை வாபஸ் பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 12
பருத்தித்துறை தபாலக கட்டடத்திலிருந்து ஸ்ரீலங்கா பொலிஸாரை வாபஸ் பெறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடபிரதேச தபால் அத்தியட்சகர் திரு எஸ். எம். சேதுகாவலர் ஸ்ரீலங்கா மேஜர் ஜெனரல் பெர்ணண்டோவிடம் இக்கோரிக்கையை விடுத்தார்.

அண்மையில் யாழ் கோட்டையில் நடைபெற்ற அரச அதிகாரிகளின் சந்திப்பின்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பருத்தித்துறை தபாலக கட்டடத்தில் முன்னர் இந்திய அமைதிப் படையினர் முகாமிட்டிருந்தனர். அவர்கள் வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் ஸ்ரீ லங்காப் பொலிஸார் அங்கு பொலிஸ் நிலையத்தை அமைத்தனர். (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

வேலணை மேற்கு
### கணேசபிள்ளை ரவிவண்ணன்

வேலணை மேற்குகணேசபிள்ளை-ரவிவண்ணன் 2-1-89இல் ஜேர்மனியில் காலமானார். இவர் கொழும்பு மகேந்திரா ஸ்ரோர்ஸ் கணேசபிள்ளை, நீலாம்பிகை அவர்களின் அன்பு மகனும், மதிவண்ணன் [லண்டன்], தர்ஷினி, ஜெயவண்ணன், இதயவண்ணன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்தாபிள்ளை- செல்லமுத்து, சுந்தரம்- மீனாட்சி ஆகியோரின் பேரனும் யாழினி ஜுவல்ஸ் மகாலிங்கம்- லோகேஸ்வரி, சாந்தலிங்கம் - ஞானம்மாள், யோகலிங்கம் - கருணைநாயகி ஆகியோரின் பெருமானும் தம்பையா- இராசம்மா, காலஞ்சென்ற வைத்திலிங்கம்- அன்னலெட்சுமி, சிவராசா- வேதநாயகி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, ஞானசூரியன் - மனோன்மணி, தங்கவடிவேல்- சரஸ்வதி, சண்முகவடிவேல் -பன்னீர்ச்செல்வி, லோகநாதன் (கனடா)- மனோகரி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.01 89 வியாழக்கிழமை பி. ப 4. 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணைமேற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
மா. கணேசபிள்ளை.

வேலணை மத்திய
கல்லூரி அருகாமை,
வேலணை- 6.

(8684)

### செல்வன் கணேசலிங்கம் ஜீவகுமார் (ஜீவன்)

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த கணேசலிங்கம் ஜீவகுமார் அகாலமரணமானார். இவர் கணேசலிங்கம் லீலாவதி ஆகியோரின் மகனும், தமிழ்ச்செல்வி (லண்டன்), உதயகுமார் (இந்தியா), தவச்செல்வி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
ஈமக்கிரியைகள் சிவன் வீதி உரும்பராய் கிழக்கில் ''செல்லகிரி'' இல்லத்தில் 12-1-1989 இன்று வியாழக்கிழமை 12 மணியளவில் நடைபெறும்.

'செல்லகிரி'
உரும்பராய் கிழக்கு

(8846)

### சிவகுரு சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய சிறுப்பர் State Bank of India)
உரும்பராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவசுப்பிரமணியம் அவர்கள் 10-01-1989 இல் காலமாகி விட்டார். இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், காலம் சென்ற ஆறுமுகம் அவர்களின் மருமகனும், லோகநாதன் [கொழும்பு] சிவநாதன் [லண்டன்], ரவிந்திரநாதன் [லண்டன்], குருநாதன் [லண்டன்], திருமதி கலா ருத்திரா [லண்டன்], திருமதி சித்திரா பரிபூரணானந்தன் [லண்டன்] அவர்களின் அன்புத தந்தையுமாவார்.
இறுதிக் கிரியை பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. கோபாலபிள்ளை,
கொக்குவில் கிழக்கு.

(8849)

## செய்திச் சாரம்

### நெல்லியடியில் நிவாரணம்

கரவெட்டி, ஜன 12
அல்வாய் தெற்கு, கரணவாய் மேற்கு, கரணவாய் மத்தி, துன்னாலை தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஒ-70)

### சண்முகலிங்கம் பதில் தலைவர்

கொழும்பு, ஜன 12
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவராக திரு. கே. சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திறைசேரியில் நிதிக் கொள்கைப் பிரிவின் பணிப்பாளராக இவர் தற்சமயம் பணிபுரிந்து வருகிறார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவராக பணிபுரிந்த தஹம்விமலசேன நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக போட்டியிடுகிறார். (உ-எ)

### நியமனம்

கொழும்பு, ஜன. 12
பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் புதிய தலைவராக திரு. நிசங்கா விஜயவர்த்தன நியமிக்கப்பட்டார்.

இவர் முன்பு இலங்கை வங்கித் தலைவர் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ஆகிய பதவிகளை வகித்து வந்தார். (ஒ-எ)

### பம்பாய் வெங்காயச் செய்கை

இந்த வருடம் யாழ். மாவட்டத்தில்மொத்தம் 165 ஹெக்டரில் பம்பாய் வெங்காயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்குத்தேவையான விதை வெங்காயம் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின்விரிவாக்கப் பகுதியினால் தருவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 115 ஹெக்டாரில் பம்பாய் வெங்காய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. (ஒ-ஐ)

### லொறியை மறித்துக் கொள்ளை

கொழும்பு, ஜன 12
கடந்த திங்கள் பட்டப்பகலில் கறுவாக்காட்டுப்பகுதியில் லொறியை மறித்து அதில் இருந்த வர்த்தகர் ஒருவர் வைத்திருந்த 1 லட்சத்து 47 ஆயிரம் ரூபாவை ஆயுதந்தரித்த இரண்டு இளைஞர்கள் அபகரித்துச் சென்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது. (எ)

## யாழ். தபாலகத்துக்கு 17 உப தபாலதிபர்கள்

யாழ்ப்பாணம், ஜன 12
யாழ் மத்திய தபால் அலுவலகத்துக்கு மேலும் பதினேழு உபதபால் அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

யாழ் மத்திய தபாலகத்தில் இருந்து ஏற்கனவே 35 உப-தபால் அதிபர்கள் வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த காலங்களில் தபாலக வேலைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இந்த வெற்றிடங்களுக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

மீண்டும் தபாலகத்தில் வேலைகள் அதிகரித்ததன் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 17 பேர் மீண்டும் யாழ் தபாலகத்துக்கு வரவுள்ளனர். (ஒ-10)

தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவு:

## 368 குடும்பங்களுக்கு ரூ. 4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன 12
தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் சுயவேலை வாய்ப்பை இழந்த 368 குடும்பங்கள் 4 ஆயிரம் ரூபா நிவாரணப் பணத்தைப் பெறவுள்ளன.

இவற்றுக்கான பட்டியல் யாழ். செயலகத்தினால் இலங்கை வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிவாரணத்தை பெறத் தகுதியானவர்களின் கொடுப்பனவுகள் காங்கேசன்துறை இலங்கை வங்கியில் வழங்கப்படவுள்ளன.

கொடுப்பனவுகளை வழங்குவதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தையிட்டிப் பகுதியில் மீன்பிடித் தொழிலை மீள மேற்கொள்வதற்காக 46 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழையைச் சேர்ந்த 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் 322 குடும்பங்களுக்கு விவசாயத்தை மேற்கொள்வதற்காகவுமே இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (ஒ-10)

## கல்வி அதிகாரிகளின் கூட்டம் 16 இல்

யாழ்ப்பாணம், ஜன 12
கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கொண்டுள்ளார்.

1989 ஆம்ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளும்படியும் கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-10)

### வல்லை...:

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என அறியவந்தது.

இதேவேளை புலோலி கிழக்கிலும் நேற்று சுற்றிவளைப்பும், தேடுதல் வேட்டையும் இடம்பெற்றன.

மாணவர்கள் மட்டுமே உட்செல்லவும் வெளியே போகவும் பெரும் சோதனைகளின் மத்தியில் அனுமதிக்கப்பட்டார்கள். (ஒ-160)

### அவசரகால...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அவசரகால விதிகளை நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

கடைசியாக அவசரகாலநிலை சட்ட விதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு காலாவதியாக இருந்த போதிலும் அதற்கு சில தினங்களுக்கு முன்னரே அதனை நீக்கிவிடுவதென புதிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா முடிவு செய்தார்.

அதையடுத்தே நேற்று அது நீக்கப்பட்டது.

### ரூ,28 லட்சம்...:

(1ம்பக்கத் தொடர்ச்சி)
வத்தினரால் பிரஸ்தாப பகுதியில் இருந்த வீடுகள் உடைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்கே இந்த வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

மே மாத இறுதியில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுவிடும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது

இந்த நடைமுறைகளை மேற்பார்வை செய்ய நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதான ஆணைப்பாளர் திரு. ரோர்கன் யாழ்ப்பாணம் வந்துள்ளார். (ஒ-5)

### தனது...,

(1ம்பக்கத் தொடர்ச்சி)
ரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது வேலைத்திட்டத்தில்—
★ தமிழருக்கு தனி மாநிலம், முஸ்லிம்களுக்கு தனி மாநிலம்—
★ 1972 இல் கைவிடப்பட்ட சோல்பரி அரசமைப்புச் சட்டத்தின் 29 ஆவது பிரிவை மீண்டும் அரசமைப்பில் சேர்த்தல்—
ஆகியன சேர்க்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவை முற்றாக சேர்க்கப்படமாட்டாது என்று திரு. ஸ்டான்லி திலகரத்ன கூறினார்.

வடக்கு— கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை சுதந்திரக் கட்சி எதிர்க்கும். அதிகாரப் பரவலாக்கலின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைச்சட்டத்தையும் சுதந்திரக்கட்சி எதிர்க்கும்.

இப்படி திரு. திலகரத்ன மேலும் சொன்னார். (உ-எ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஜன 12
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி பின்போடப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது தெரிந்ததே. (ஒ-5)

### மீண்டும் சிமெந்து ஆலைகள் திறப்பு

கொழும்பு, ஜன 12
நாட்டின் மின் விநியோகம் சீரானதைஅடுத்து புத்தளம், காலி ஆகிய இடங்களிலுள்ள சிமெந்து ஆலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

காங்கேசன்துறையிலும் மிகவிரைவில் சிமெந்து உற்பத்தி வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### முதுகெலும்பு முறிந்து விட்டதாம்

கொழும்பு ஜன 12
தென் பகுதியில் தீவிரவாதிகளின் முதுகெலும்பை முறித்து விட்டோம்.

அம்பாந்தோட்டை இராணுவ இணைப்பு அதிகாரி கேர்ணல் சிறி பீரிஸ் இப்படித் தெரிவித்தார் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

### பார்சல்கள் தீக்கிரை

ஒட்டுசுட்டான் ஜன 12
ஒரு படைமுகாமிலிருந்து மற்றொரு முகாமுக்கு பஸ்ஸில் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவுப் பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

தீக்கிரையாக்கப்பட்ட பொருள்களில் உணவு, உடுப்பு பார்சல்கள் அடங்கி இருந்தன [ஒ-113]

### தாதிகள் பயிற்சிக் கல்லூரிகள்

மாகாண ரீதியில் தாதிகள் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்படும் என்று சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார்.

தாதிகள் கட்டுப்பாட்டை நீக்கி மேலும் பலர் தாதிச் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மாதம் 1, 100 ரூபா சம்பள அடிப்படையில் 5 ஆயிரம் தாதிகளைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

## சிங்கள அகதிகள் திருமலை கோட்டையிலிருந்து வெளியேற்றப்படுவார்!

திருகோணமலை, ஜன. 12
திருமலை பிரட்ரிக் கோட்டையிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் குடியிருக்கும் சிங்கள அகதிகள் அனைவரும் மிகவிரைவில் அங்கிருந்து அகற்றப்படுவர்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை முதல்வரின் செயலாளர் டாக்டர் கே. விக்னேஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

சினக்குடாவில் அகதி முகாமில் தங்கியிருக்கும் தமிழ் மக்களும் மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள்.

மீளக்குடியமர்த்தல் விடயத்தில், சிங்கள மக்கள் அவர்கள் முன்னர் இருந்த இடங்கள் கோயில் காணிகளாக இருந்தால் அங்குமீண்டும் குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள். அதுடன் அத்துமீறிக் குடியிருந்தவர்களும் மீண்டும் அத்துமீறிக் குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

முக்கியமாக சிறிமாபுர என்னும் பகுதியிலுள்ள காணிகள் கோவில்களுக்குச் சொந்தமானவை. அங்கு மீண்டும் அவர்கள் குடியமர்த்தப்படமாட்டார்கள். சொந்தக் காணி உள்ளவர்கள் விரும்பினால் குடியேறலாம். அதற்கு அவர்கள் விரும்பாவிட்டால் வேறு இடத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

மணிக்கூட்டுக் கோபுரம் முதல் கோட்டை வரையுள்ள கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்படும் அப்பகுதியில் எவரும் குடியமர்த்தப்படமாட்டார்கள்.

— இப்படி அவர் மேலும் கூறினார்.

## மட்டுவில் பகுதியில் துப்பாக்கி சூட்டுசம்பவம்

### ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜன 12
சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் சிவன் கோவிலடிப் பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

இச் சம்பவத்தின்போது தோட்ட வேலை செய்து கொண்டிருந்த இராமலிங்கம் சிவஞானம் (25 வயது) என்பவர் இடையில் சிக்குண்டு சூட்டுக் காயத்துக்கு இலக்கானார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த பகுதியை படையினர் சுற்றிவளைத்திருப்பதாகக் கூறப்பட்டது. (ஒ-10)

## பாதுகாப்புஅமைச்சுக்கு லலித் பிரியாவிடை!

கொழும்பு, ஜன. 12
தேசிய பாதுகாப்பு அமைச்சில் இருந்து நேற்று திரு. அத்துலத்முதலி விடை பெற்றுக் கொண்டார்.

அவரிடம் இருந்த தேசிய பாதுகாப்பு அமைச்சு, திரு பிரேமதாஸ ஜனாதிபதியாக வந்த பின்னர் ஒழிக்கப்பட்டுவிட்டது.

தற்போது வர்த்தக, கப்பல் போக்குவரத்து, உணவுத்துறை அமைச்சராக லலித் அத்துலத்முதலி இருக்கிறார்.

பாதுகாப்பு படையினருக்கு திரு: அத்துலத்முதலி பிரியாவிடைச் செய்தி ஒன்றை விடுத்தார்.

1984 இல் திரு. அத்துலத் முதலி தேசியப்பாதுகாப்பு அமைச்சராகவும் பிரதிபாதுகாப்பு அமைச்சராகவும் பதவி ஏற்றபோது இலங்கையின் முப்படைகளிலும் 35 ஆயிரம் பேரே இருந்தனர்.

நேற்று அவர் விடை பெற்றபோது மொத்தம் ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் முப்படையில் இருந்தனர். (உ-எ)

## வடக்கு, கிழக்கு செல்ல அமைச்சர்களுக்கு பணிப்பு

கொழும்பு ஜன. 12
வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட சகல மாகாணங்களுக்கும் மத்திய அமைச்சர்கள் விஜயம் செய்ய வேண்டும்.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

மத்திய அமைச்சர்கள் மாகாண முதலமைச்சர்களுடன் பேச்சுகள் நடத்தி மாகாணசபைகள் இயங்குவதற்குத்தேவையான சகல நடவடிக்கைகளையும் நேரில் கண்டறிந்து கொள்ள வேண்டும் என அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. (உ-எ)

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் வழங்கும்உதவி

யாழ்ப்பாணம், ஜன. 12
அகதிகள் புனர்வாழ்வு நிதியம் தெரிவு செய்யப்பட்ட அகதிகளுக்கு 16ஆம் திகதி உபகரணங்களை வழங்கவுள்ளது.

நிதியத்தின் நிர்வாகி இதனைத் தெரிவித்தார்.

அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த உபகரணங்களில் தையல் இயந்திரங்கள், மீன்பிடி வலைகள், மாட்டு வண்டிகள் முதலியன அடங்கும் எனவும் கறவைப் பசுக்கள், எருதுகள் ஆகியனவும் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 598/8, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 598/8 Navalar Road, Jaffna on Thursday 12th January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org